பக்கங்கள் 22+7

மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மாசி 20 ஞாயிற்றுக்கிழமை 03.03.2024 அதிர்வு 216






## தமிழ் மக்கள் பெருமளவில் திரண்டு

# சாந்தனின் புகழுடலுக்கு கண்ணீர் மல்கி அஞ்சலி

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன், கே.வசந்தன்)

சாந்தன் என்று அழைக்கப்படும் தில்லையம்பலம் சுதேந்திர ராஜாவின் புகழுடலுக்குத் தமிழ் மக்கள் இன்று பெருமளவில் திரண்டு கண்ணீர் மல்கி அஞ்சலி செலுத்தினர்.

தமிழகத்தில் உயிர் துறந்த சாந்தனின் புகழுடல் இன்று மக்கள் அஞ்சலி செலுத்த ஏதுவாக வவுனியாவில் இருந்து அவரது சொந்த ஊரான வடமராட்சிக்கு ஊர்வலமாக எடுத்துவரப்பட்டது.

04










### இந்தியாவில் 33 வருடங்கள் சிறையில்

# சாந்தனுடன் இருந்த முருகனின் தாயாரும் சகோதரியும் கதறல்!

## சட்டத்தரணி புகழேந்தியும் கண்ணீர் மல்கினார்





(படங்கள், வீடியோ - எஸ்.நிதர்ஷன்)













# கிளிநொச்சியில் பெருமளவிலானோர் ஒன்றுதிரண்டு கண்ணீர்மல்க அஞ்சலி



மறைந்த சாந்தனின் புகழுட லுக்குக் கிளிநொச்சியில் பெரு மளவிலான மக்கள் ஒன்று திரண்டு கண்ணீர்மல்க அஞ் சலி செலுத்தினர்.
(படங்கள்:– எஸ்.நிதர்ஷன்)















# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**சாந்தனின்...**

வவுனியா முன்னாள் போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் அலுவலகத்துக்கு முன்பாக இன்று காலை அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் சாந்தனின் புகழுடல் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் ஊர்வலமாக வவுனியா பழைய பஸ் நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்கும் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

அங்கிருந்து புகழுடல் தாங்கிய ஊர்தி ஊர்வலமாக மாங்குளம் பகுதிக்கு வந்தது. அங்கும் புகழுடல் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ந்து கிளிநொச்சியில் மக்கள் அஞ்சலிக்காகப் புகழுடல் வைக்கப்பட்ட பின்னர் யாழ்ப்பாணத்துக்குப் புகழுடல் எடுத்துவரப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் கொடிகாமம், நெல்லியடி ஊடாக அவரது பிறந்த மண்ணான உடுப்பிட்டிக்குப் புகழுடல் ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு வல்வெட்டித்துறை - தீருவிலில் இன்று மாலை மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டுள்ளது.

அங்கு நடைபெறும் இறுதி நினைவஞ்சலி நிகழ்வில் அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு உணர்வுபூர்வமாக மலரஞ்சலி செலுத்தி வருவதுடன் கண்ணீர்மல்கி தமது கவலைகளையும் வெளிப்படுத்தி வருகின்றனர்.

இதன்பின்னர் சாந்தனின் வீட்டுக்கு எடுத்துச் செல்லப்படும் புகழுடல் நாளை அவரது குடும்ப மயானமான எள்ளங்குளம் மயானத்தில் அடக்கம் செய்யப்படவுள்ளது.












# மீனவர்கள் கறுப்புக்கொடிப் போராட்டம்



(எஸ்.நிதர்ஷன்)

சுழிபுரம் மேற்கு அலைமகள் கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தின் கடற்றொழிலாளர்கள் இன்று காலை சவுக்கடி கடற்பரப்பில் இருந்து இலங்கை எல்லை வரை சென்று கறுப்புக்கொடி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

20 படகுகளில் 32 மீனவர்கள் கறுப்புக்கொடிகளைப் படகில் காட்டியவாறு எல்லையை நோக்கிப் பயணமாகி கடலில் சுமார் 30 நிமிடங்கள் வரை போராட்டத்தை முன்னெடுத்தனர்.

"தாண்டாதே தாண்டாதே எல்லையைத் தாண்டாதே, அடிக்காதே அடிக்காதே வயிற்றில் அடிக்காதே, தொப்புள்கொடி உறவுகளாக எம்மைப் பார்க்கத் தெரியவில்லையா?, இழுவை மடி வலைகளை வெட்டி தொழிலின்றி தவிக்கின்றோம்" என்ற பாதைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி படகுகளை வட்டமிட்ட வண்ணம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை, இலங்கை எல்லைப் பகுதியில் கடற்படையின் ரோந்துப் படகுகள் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

தொடர்ந்து கரையை நோக்கி வருகை தந்த மீனவர்கள் சவுக்கடி கடற்படை முகாம் முன்பாக அமர்ந்து கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.






## ட்ரோன் கமரா பறக்க விட்ட இளைஞன் ஒருவர் கைது!

(ந.லோகதயாளன்)

கிளிநொச்சி மாவட்டம், திருவையாறுப் பகுதியில் உள்ள இராணுவ முகாம் மீது ட்ரோன் கமரா பறக்க விட்ட நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறும்படம் ஒன்றைத் தயாரிப்பதற்காகவே ட்ரோன் கமராவைப் பறக்க விட்டார் எனவும், வேறு எந்தக் காரணமும் இல்லை எனவும் கைதான இளைஞன் தெரிவித்துள்ளார்.

இருந்தபோதும் இது தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பாலைதீவு திருவிழாவுக்குச் சென்ற இரண்டு படகுகள் மோதுண்டு விபத்து



(ந.லோகதயாளன்)

பாலைதீவு திருவிழாவுக்குச் சென்று திரும்பிய இரண்டு படகுகள் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் 10 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டம், பூநகரி பிரதேச செயலகத்துக்குட்பட்ட பாலைதீவில் அமைந்துள்ள புனித அந்தோனியார் தவக்கால திருத்தல வருடாந்தத் திருவிழா நேற்று நடைபெற்றது.

இந்த ஆலயத் திருவிழாவுக்குப் பெருமளவான பக்தர்கள் படகுகளில் சென்று திரும்பினர்.

இதன்போது இரண்டு படகுகள் மோதுண்டு விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் காயமடைந்த 10 பேர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அவர்களில் ஒருவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சேவைச் சீத்துவம்

அரச சேவைகளில் - குறிப்பாக அரச அலுவலகங்கள் மற்றும் பொது நிறுவனங்களின் - சேவைகளில் மக்கள் பெரும் அதிருப்தி அடைந்துள்ளனர்.

தங்களுடைய காரியங்களை ஆற்றுவதற்காக ஒன்றில் செல்வாக்கு மிக்க மேலிடத்தின் தலையீட்டுடன் செல்ல வேண்டும் அல்லது லஞ்சம் கொடுக்கத் தயாராக இருக்க வேண்டும் என்ற நிலைமையே அரச அலுவலகங்களில் பெரும்பாலும் இப்போது உள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஆய்வு ஒன்றில் இத் தகவல் வெளியாகியிருக்கின்றது.

அரசு அலுவலகங்களுக்குச் செல்வதை விரும்பத்தகாத அனுபவம் என்று பெரும்பாலான மக்கள் வர்ணிக்கின்றனர்.

ஏனெனில் அரசு அலுவலகங்களில் ஒரு வேலையைச் செய்வதற்கு அவர்கள் வரிசையில் நிற்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். அல்லது ஓர் அதிகாரியின் பதில் வரும் வரை மணிக்கணக்கில் காத்திருக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். மேலும் தங்கள் வேலையைச் செய்யப் பல முறை அந்த அலுவலகங்களுக்கு அவர்கள் அலைய வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் உரிய வழிகாட்டுதல்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் இல்லாததால், மக்கள் ஒரே துறையின் பல பிரிவுகளுக்குப் பலமுறை செல்ல வேண்டியிருந்தது என்பதையும் கணக்கெடுப்பு வெளிப்படுத்தியுள்ளது.

சுகாதாரம் மற்றும் கல்வித்துறை தொடர்பான அரச அலுவலகங்கள், திணைக்களங்கள் மற்றும் அடிமட்ட அரச அலுவலகங்களுக்குச் சென்ற ஐந்நூறு பேரை இந்த ஆய்வுக்காக நேர்காணல் செய்தார்கள் எனக் கணக்கெடுப்பை மேற்கொண்ட பேராசிரியர் வசந்த அத்துகோரள குறிப்பிட்டிருக்கின்றார்.

அந்த ஐந்நூறு பேருக்கும் வழங்கப்பட்ட விரிவான கேள்வித்தாளின் படி, கிராமசேவகர், சமுர்த்தி உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர், விவசாய ஆராய்ச்சி உதவியாளர் மற்றும் குடும்ப சுகாதார உத்தியோகத்தர்கள் அலுவலகங்களுக்குச் சென்றபோது அவர்கள் பெரும்பாலும் தேடி வந்து உதவி செய்தனர், மிகுந்த ஒத்தாசையாகச் செயற்பட்டனர் எனப் பொதுமக்கள் அவர்களின் செயற்பாட்டை மெச்சினர் என்று பேராசிரியர் வசந்த அத்துகோரள கூறினார்.

ஆனால், ஏனைய அரச அதிகாரிகளின் சேவைகளில் தாங்கள் திருப்தியடையவில்லை என்று மக்கள் பதிலளித்திருக்கின்றனர்.

உலகளாவிய ரீதியில் தொடர்பாடல் துறை பெரும் புரட்சிகரமான மாற்றங்களுக்குள் நுழைந்து விட்டது. உலகமே கைத்தொலைபேசிக்குள் அடங்கி விட்டது என்று கருதும் மாற்றம் உலகளாவிய ரீதியில் ஏற்பட்டு வருகின்றது.

ஆனால் இலங்கையிலோ அரசு அலுவலகங்கள், திணைக்களங்களின் சேவை குறித்து தொலைபேசி ஊடாக அடிப்படைத் தகவல்களை கூட அறிய முடியாத பெரும் பின்னடைவு நிலையே இங்கு நீடிக்கின்றது.

மேற்படி ஆய்வின் மற்றொரு நடவடிக்கையாக 278 பிரதேச சபைகளில் 98 பிரதேச சபைகளுக்கும், 589 கிராமசேவையாளர்கள், சமுர்த்தி மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவர்கள் பதிலளித்தார்களா எனப் பார்க்குமாறு கோரப்பட்டது எனப் பேராசிரியர் விளக்கினார்.

அதன்படி 49 சதவீத தொலைபேசிகள் வேலை செய்யவில்லை. அதே சமயம் 22 சதவீத தொலைபேசிகள் வலையமைப்பில் இருந்தாலும் பதிலளிக்கப்படவில்லை என்பது தெரியவந்தது. எனவே, 29 சதவீத தொலைபேசிகள் மட்டுமே செயல்பாட்டில் இருந்தன.

இதுதான் இலங்கையில் அரச அலுவலகங்கள் பொது நிறுவனங்களின் சேவைச் சீத்துவம்.

# வடக்கு பெண் தலைமைத்துவத்தை ஏற்குமாறு ஆளுநரிடம் கோரிக்கை!

## ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியம் அழைப்பு

(எஸ்.நிதர்ஷன்)



பெண்களுக்கான தலைமைத்துவத்தை ஏற்குமாறு வடக்கு மாகாண ஆளுநருக்கு ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியம் அழைப்பு விடுத்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான பணிப்பாளர் பியோ ஸ்மித், வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸை சந்தித்து கலந்துரையாடினர்.

யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

பெண்கள், இளைஞர்கள் மற்றும் சமூகங்கள் மீது கவனம் செலுத்தி பாலியல் மற்றும் குடும்பத் திட்ட ஆரோக்கியம், பெண்களுக்கான உரிமைகள் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகளை தடுப்பது உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் அதிகாரிகள், துறைசார் நிபுணர்கள் மற்றும் சிவில் அமைப்புகளுடன் கலந்துரையாடும் நோக்கில் பணிப்பாளர் பியோ ஸ்மித் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

அதன் ஒரு கட்டமாக வடக்கு மாகாண ஆளுநரைச் சந்தித்து, மாகாணத்தில் வசிக்கும் பெண்களின் நிலை குறித்துக் கலந்துரையாடினார்.

பொலீஸ் நிலையங்களில் பாலின சமத்துவத்தின் அடிப்படையிலான விசாரணைப் பிரிவை மேம்படுத்துவதற்கான தேவை குறித்தும், தமிழ் பெண் பொலீஸ் உத்தியோகஸ்தர்களுக்கான ஆளணி தொடர்பிலும் ஆளுநர் இதன்போது தெளிவுப்படுத்தினார்.

பெண்களுக்கான தொழில் சட்டங்கள் போதுமானதாக இல்லை என தெரிவித்த ஆளுநர், நிறுவனமயப்படுத்தப்பட்ட பாதுகாப்பு பெண்களுக்கு இல்லை எனவும் கூறினார்.

தொழில் இடங்களில் கழிப்பறை வசதி, உணவு வசதிகள் உள்ளிட்ட பல விடயங்கள் பெண்களுக்குப் போதுமானதாக இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணத்தில் 65 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் காணப்படுகின்ற போதிலும், அவர்கள் வாழ்வியலை நடத்திச் செல்வது பெரும் போராட்டமாக அமைந்துள்ளது என்று ஆளுநர் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் வசிக்கும் பெண்களின் நிலை தொடர்பில் கேட்டறிந்துக் கொண்ட ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான பணிப்பாளர் பியோ ஸ்மித், இங்குள்ள பெண்களுக்கான தலைமைத்துவத்தை ஏற்று, அவர்களுக்கான முன்மாதிரியாக செயல்பட வடக்கு மாகாண ஆளுநருக்கு இதன்போது அழைப்பு விடுத்தார்.

# சென்னை வடபழனி வைத்தியசாலையில் சிவாஜிலிங்கம்!



இலங்கைத் தமிழ் அரசியல்வாதியும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம். கே. சிவாஜிலிங்கம் திடீர் உடல் நலக்குறைவால் சென்னை வட பழனி விஜயா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சென்னைக்கு சென்றிருந்த வேளை, திடீரென உடல்நிலை பாதிப்படைந்துள்ளார் என்றும் நேற்று (02) அவர் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வழக்கு ஒன்றின் நிமித்தமாக கொழும்புக்கு சென்று பின்னர், வழக்கு முடிவடைந்து அவர் நேற்றுக் காலை சென்னைக்கு சென்றுள்ளார் என்று கூறப்படுகிறது.

இந்த நிலையில், திடீரென உடல்நிலை பாதிப்படைந்து அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை, உடல் நலக்குறைவு காரணமாக தொடர் மருத்துவ சிகிச்சைக்காக சென்னையில் தங்கியிருந்து சிவாஜிலிங்கம் சிகிச்சை பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஐக்கிய அரபு இராச்சியத் தூதர் வடக்கு ஆளுநரைச் சந்தித்தார்



ஐக்கிய அரபு இராச்சியத்தின் இலங்கைக்கான தூதுவர் எச்.ஈ.கலிட் நாசர் சுலைமான் அல்அமீரி (u;.E. Khaled NasserSulaiman AlAmeri), வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ். எம்.சார்ள்ஸை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்தக் கலந்துரையாடல் நேற்று முன்தினம் (01) மாலை யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதியொன்றில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப் படக் கூடிய புதிய முதலீடுகள் தொடர்பில் அதிக கவனம் செலுத் தப்பட்டது.

அத்துடன், பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் சவால்கள், காலநிலை மாற்றத்தின் தாக்கங்கள் உள்ளிட்ட விடயங்களும் கலந்துரையாடப்பட்டன.

வடக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கு தொடர்ச்சியாக ஒத்துழைப்புகளை பெற்றுக் கொள்வது தொடர்பிலும் இதன் போது கலந்துரையாடப்பட்டது.

இந்த நிலையில் இதற்கான ஒத்துழைப்புகளை தொடர்ச்சியாக வழங்குவதாகவும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் இலங்கைக் கான தூதுவர், ஆளுநரிடம் உறுதியளித்தார் என்று தெரி விக்கப்பட்டுள்ளது.

# காணிகளது உரிமங்கள் வாகரையில் கையளிப்பு!





ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவில் உதித்த உரிமை வேலைத் திட்டத்தின் கீழ் அளிப்பு, பூரண அளிப்பு மற்றும் காணி அனுமதிப் பத்திரங்கள் என்பன தேசிய ரீதியில் வழங்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் வாகரையில் இடம்பெற்ற காணி உரிமங்கள் வழங்கும் நிகழ்வில் பிரதம அதிதிகளாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான சி. சந்திரகாந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பிரதேச செயலாளர் எந்திரி ஜீ.அருணன் தலைமையில் பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் இடம் பெற்ற நிகழ்வில் வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் 150 பூரண அளிப்புக்களும் 400 காணி அனுமதிப் பத்திரங்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மாவட்ட அரச அதிபரும் மாவட்ட செயலாளருமான திருமதி.ஜஸ்டினா முரளிதரன், மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவரின் பிரத்தியேக செயலாளரும், தேசிய அமைப்பாளருமான த.தஜீவரன், உள்ளிட்ட ஆளுநரின் உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உயரதிகாரிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

# தமிழக மீனவர்கள் எமது கடல் வளத்தை சூறையாடுவதை அனுமதிக்க முடியாது!

## ஈரோஸ் ஜனநாயக முன்னணி பொதுச் செயலாளர் தெரிவிப்பு

(பழுவூரான்)

தமிழக மீனவர்கள் நவீன இராட்சத படகுகளின் துணையோடும், தடை செய்யப்பட்ட இரட்டைமடி வலைகளுடனும் இலங்கையின் வடபிராந்திய கடற் பகுதியில் அத்துமீறிப் பிரவேசித்து மீன்வளத்தை கொள்ளையிட்டு செல்கின்றனர்.

இந்தச் செயற்பாடு தமிழர்களின் வாழ்வாதாரத்தை மட்டுமல்ல, இலங்கையின் பொருளாதாரத்தையும் பாதிக்கும் விடயம் என்பதை இலங்கை அரசு புரிந்து கொள்ள வேண்டும்.

ஆகவே எமது நாட்டின் மீன் வளத்தை இன்னுமொரு நாடு அடாத்தாக அபகரித்துச் செல்வதை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதற்காக இலங்கை அரசு இந்திய அரசோடு பேசி வடபகுதி மீனவர்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் பொருத்தமான நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

இவ்வாறு ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் பொதுச் செயலாளர் இரா.ஜீவன் இராஜேந்திரன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

பொருளாதார நெருக்கடியாலும், காலநிலை மாற்றத்தாலும் மீனவத் தொழிலாளர்கள் மிக மோசமான நெருக்கடிகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறான நிலையில் அவர்களுடைய வாழ்வாதாரத்துக்குப் பாதிப்பேற்படுத்தும் வகையில் இந்திய தமிழக மீனவர்களின் நூற்றுக் கணக்கான அதி நவீன படகுகள் இலங்கையின் கடல் எல்லைக்குள் அனுமதியின்றி உட்புகுந்து மீன் குஞ்சிகளைக் கூட விட்டு வைக்காது அனைத்தையும் அள்ளிச் செல்கின்றன.

இது மனிதாபிமானச் செயற்பாடாக இருக்காது. அத்தோடு இலங்கைக் கடற்படையினர் கடல் எல்லை பாதுகாப்பு ரோந்துப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் போது தமிழக மீனவர்கள் ஆயிரம், இரண்டாயிரம் படகுகளில் உள்நுழைந்து மீன்வளத்தைச் சுரண்டிச் செல்வது ஆச்சரியமாகவும், அதிசயமாகவும் இருக்கிறது.

இந்தச் செயற்பாடு கடற்படை அதிகாரிகளின் ஆசீர்வாதத்தோடு நடக்கின்றதா? என்ற நியாயமான சந்தேகமும் மக்கள் மத்தியில் வலுப்பெற்றிருக்கிறது.

இவ்வாறான நிலையில் எமது தொப்புள் கொடி உறவுகளான தமிழ் மக்களுடனான எமது உறவை வெட்டி எறிவதற்கான நடவடிக்கைகள் திரை மறைவில் மேற்கொள்ளப்படுகிறதா? என்ற சந்தேகமும் ஏற்படுகிறது.

அத்தோடு செங்கடல் பகுதியில் ரோந்துப் பணியை வெற்றிகரமாக முடித்து நாடு திரும்பும் கடற்படையை அரசோடு இணைந்து நாமும் பாராட்டுகிறோம்.

அதேவேளை நீங்கள் செங்கடல் பிரதேசத்தில் காட்டிய கரிசினையையும், கடமையுணர்வையும் எமது கடல் எல்லைக்குள் அத்துமீறிப் பிரவே



சிக்கும் தமிழக மீனவர்கள் விடயத்திலும் கவனம் செலுத்த வேண்டியது அவசியமானது.

எது எப்படியோ இலங்கையின் வடபகுதி மீனவர்களின் தொழில் பாதுகாப்பில் இலங்கை அரசும் இந்திய அரசும் தமிழக முதல்வரும் தமிழக மீனவர் சங்கங்களும் மீனவ தொழிலாளர் உறவுகளும் மனிதாபிமான அடிப்படையில் தீர்வைக் காண ஆக்க பூர்வமான நடவடிக்கைகளைக் காலம் தாழ்த்தாது எடுக்க வேண்டும்.

அதேவேளை தங்களது பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வை எட்டும் வகையில் இலங்கை வடபகுதி மீனவ உறவுகள் முன்னெடுக்கும் கவன வீர்ப்புப் போராட்டங்கள் உட்பட அனைத்துச் செயற்பாடுகளுக்கும் ஈரோஸ் ஜனநாயக முன்னணி தனது முழுமையான ஆதரவை வழங்கும் .- என்றுள்ளது.

# மட்டக்களப்பில் சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் செயற்றிட்டம் முன்னெடுப்பு





(வவுணதீவு)

கிழக்கு மாகாணத்தில் மாற்றுப் பராமரிப்பு மற்றும் அதற்கான குடும்பங்களை வலுப்படுத்தல் திட்டத்தை மட்டக்களப்பு மாவட்டத்தில் அமுல்படுத்தல் தொடர்பாகத் தெளிவுபடுத்தும் நிகழ்வு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை (01) மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி.ஜே. முரளீதரன் தலைமையில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட செயலகம், ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு அமைப்பு என்பன இணைந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக் காலமாக சிறுவர் பாதுகாப்பு இல்லங்களுக்கு வரும் பிள்ளைகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கான வேலைத் திட்டமாக இந்த மாற்றுப் பராமரிப்பு மற்றும் அதற்கான குடும்பங்களை வலுப்படுத்தல் திட்டம் மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப் படவுள்ளது.

கிழக்கு மாகாண ஆளுநரின் உத்தரவின் பெயரில் கிழக்கு மாகாண சிறுவர் இல்லங்களில் கற்றல் செயற்பாடுகளுக்காக தங்கியிருக்கும் சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப் படுகின்றன.

கிழக்கு மாகாணத்தில் 1204 பிள்ளைகள், சிறுவர் பாதுகாப்பு இல்லங்களில் பராமரிக்கப்படுகின்றன.மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் 1050 சிறுவர்கள் 31 இல்லங்களில் பராமரிக்கப்படுகின்றனர்.

இதன் போது மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்படும் சிறுவர் பராமரிப்பு மற்றும் மாற்றுப் பராமரிப்பு நிலை தொடர்பாக சிறுவர் பாதுகாப்பு நன்னடத்தை திணைக்களத்தின் கிழக்கு மாகாண ஆணையாளர் ரிஸ்வானி ரிபாஸ் தெளிவுபடுத்தி மாவட்டத்தில் காணப்படும் சிறுவர் பராமரிப்பின் நிலை மற்றும் நடைமுறைச் சவால்கள் தொடர்பில் விளக்கமளித்தார்.

இந்த நிகழ்வில் உதவி மாவட்ட செயலாளர் ஜி.பிரணவன், மாவட்ட சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் ரி.மதிராஜ், மாவட்ட உள சமூக இரணப்பாளர் பிரபாகர், மாவட்ட செயலக அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர்கள், பொலிஸ் மற்றும் மாவட்டத்தின் 14 பிரதேச செயலக பிரிவுகளிலும் பணியாற்றும் சிறுவர் உரிமை மேம்பாடு, சிறுவர் நன்னடத்தை, முன் பள்ளி அபிவிருத்தி ஆகிய துறைசார் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# வவுணதீவில் மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கல்



(பழுவூரான்)

மட்டக்களப்பு மண்முனை மேற்கு வவுணதீவுப் பிரதேச செயலக கிராம அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்ட கொத்தியாபுலை மாதர் கிராம அபிவிருத்திச் சங்க அங்கத்தவர்களின் பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கான அப்பியாசக் கொப்பிகள் வழங்கபட்டுள்ளன.

நிகழ்வில் பிரதேச செயலாளர் திருமதி ந.சத்தியானந்தி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.இந்த நிகழ்வில் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான அப்பியாசக் கொப்பிகள் 98 மாணவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன.

# கல்முனையில் திண்மக் கழிவகற்றல் மேம்பாடு தொடர்பில் கலந்துரையாடல்





(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகரில் திண்மக் கழிவகற்றல் சேவையை மேம்படுத்துவது தொடர்பாக கல்முனை மனிதவள அபிவிருத்தி அமைப்பு ஏற்பாடு செய்திருந்த விசேட கலந்துரையாடல் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நடைபெற்றது.

கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி முன்னிலையில் அமைப்பின் தலைவர் டாக்டர் எம்.எச். ரிஸ்பின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாநகர சபையின் பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச். ஜெளஸி, சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எம்.பாயிஸ், கல்முனை ஜம்இய்யத்துல் உலமா சபையின் தலைவர் மௌலவி முர்ஷித் முப்தி, உப தலைவர் மௌலவி அப்துல் ஹமீட் உட்பட மனிதவள அபிவிருத்தி அமைப்பின் உறுப்பினர்களும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது கல்முனை மாநகரம் திண்மக் கழிவகற்றல் செயல்பாடுகளில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் சவால்கள் அதனை தீர்ப்பதற்கான வழிமுறைகள், கல்முனை மாநகர சபைக்கு பொது மக்கள் வழங்க வேண்டிய ஒத்துழைப்புகள், அதற்கான வழிகாட்டல்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பிலும் எதிர்காலத்தில் திண்மக் கழிவகற்றல் சேவையை வினைத்திறன் மிக்கதாக கட்டியெழுப்புவதற்கான மூலோபாயங்கள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

அதேவேளை, கல்முனை மாநகர சபையைப் பொறுப்பேற்றது முதல் கடந்த ஒன்றரை வருட காலமாக வினைத்திறனுடன் சேவைகளை வழங்கி வரும் ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி, கல்முனை மனிதவள அபிவிருத்தி அமைப்பு மற்றும் கல்முனை ஜம்இய்யத்துல் உலமா சபை ஆகியவற்றால் நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

# எருக்கலம்பிட்டி முஸ்லிம் ம.வி.க்கு சுத்திகரிப்பு உபகரணம் வழங்கல்

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் - எருக்கலம்பிட்டி முஸ்லிம் மஹா வித்தியாலயத்துக்கு ஒரு தொகுதி பிளாஸ்டிக் தும்புத்தடி உள்ளிட்ட பொருள்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

பாடசாலையின் ஆரம்ப பிரிவு பகுதித் தலைவர் ஏ.நஜ்மி ஆசிரியர் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க இவை வழங்கப்பட்டன.

சமூக நலன்புரி சேவைகள் அமைப்பின் தலைவரும், நாகவில்லு ஆர். என். ஹாட்வெயார் உரிமையாளருமான ஜபருள்ளாஹ் ரஸ்மின் பொருள்களை வழங்கினார்.

புத்தளம் - எருக்கலம்பிட்டி முஸ்லிம் மஹா வித்தியாலயத்தில் சுற்றுப்புறச் சூழலை சுத்தமாக வைத்திருக்கும் நோக்கில் பாடசாலையில் உள்ள சகல வகுப்பறைகளுக்கும் பிளாஸ்டிக் தும்புத்தடி பகிர்ந்தளிக்கப்படவுள்ளன என்று பாடசாலையின் ஆரம்ப பிரிவு பகுதித் தலைவர் ஏ.நஜ்மி ஆசிரியர் தெரிவித்தார்.



# மனநிலை பாதிப்பால் பெண்களுக்கு ஏற்படும் பசியின்மை நோய்!



தொகுப்பு:
பைஷல் இஸ்மாயில்

பெண்களுக்கு அதிகமாக ஏற்படும் நோய்களின் வரிசையில் பல நோய்கள் இருந்தாலும், குறிப்பாக மனநிலை பாதிப்பால் அவர்களுக்கு ஏற்படும் பசியின்மை நோய் பெரும்பாலும் பெண்களுக்கு ஏற்படுகிறது.

குறிப்பாக விடலைப் பருவம் என்று சொல்லக் கூடிய பெண்களுக்கு இது ஏற்படுகிறது. இந்த நோய் ஆண்களுக்கு மிகவும் அபூர்வமாக ஏற்படும். அதேபோல் சில நேரங்களில் இந்த நோய் வயது முதிர்ந்த பெண்களுக்கும் ஏற்படலாம். இது பெரும்பாலும் உயர்மட்டத்திலுள்ள பெண்களுக்கு ஏற்படுகிறது. அவர்கள் மிகவும் குறிக்கோள் உடையவர்களாகவும், நேரத்துக்குப் பணி புரிபவர்களாகவும், தொழிலில் பயபக்தி உடையவர்களாகவும் இருப்பார்கள்.



### எதனால் ஏற்படுகிறது?

உடலை மிகவும் ஒல்லியாக வைத்துக் கொள்ள இளம் வயது பெண்கள் முனைவதே இதற்கு காரணம் என்று சொல்லப்படுகிறது. சிலர் ஏற்கனவே குண்டாக இருப்பார்கள். இவர்கள் மெலிய நினைத்து பசியைத் தவிர்த்து உணவைத் தள்ளி விடுவார்கள். சில பெண்கள் பருவமடைந்ததும் உடற்பருமன் கூடி விடும் என்ற பயத்தில் உணவை வெறுத்து ஒதுக்கி விடுவார்கள்.

இந்த நோயை மனநோய்களிலும், உணவு தொடர்பாகத் தோன்றும் நோய் வகையிலும் வைத்தியர்கள் சேர்த்துள்ளனர். இவர்களின் எடை குறைந்து விடும். இவர்கள் தொடர்ந்து உணவு உண்ணாமையால் அவர்களின் உடலில் பல்வேறு ஹோர்மோன் குறைபாடுகளும் ஏற்படும்.

### நோய் அறிகுறிகள்

ஒரு பெண்ணின் உடலின் எடை இருக்க வேண்டிய எடையிலிருந்து குறைந்த பட்சம் 25 சதவிகிதம் குறைந்து விடும்.

பெண்களுக்கு சரியான உணவும் சத்துக்களும் கிடைக்காததால் இவர்களுக்கு மாதா மாதம் இடம் பெறும் மாதவிடாயும் நின்று விடும். குறைந்தது 3 மாதங்கள் இவர்களுக்கு இந்தப் பிரச்சினை இருக்கும். திருமணமான பெண்ணாக இருப்பின் மாதவிடாய் நின்று விட்டால் 'கர்ப்பம்' என்று நினைத்து விடக் கூடாது. மாதவிடாய் சரிவர போகாமல் இருப்பதற்கும், நிற்பதற்கும் உணவும் ஒரு முக்கிய காரணம் என்பதை இவர்கள் கண்டிப்பாக அறியவேண்டும்

இதேபோன்று விடலைப் பருவத்திலுள்ள ஆண்களுக்கு இந்த நோய் ஏற்பட்டால் அவர்களிடம் சாதாரணமாக இந்த வயதில் தோன்றக் கூடிய 'பாலின உணர்ச்சி' எதிர்பாலினத்தார் மீது ஏற்படும். கவர்ச்சி ஆகியவை குன்றிவிடும். அதனால் அவர்களின் உடல் எடை குறைந்து வலுவிழந்து காணப்படுவார்கள் .

மேலும், இதயத்துடிப்பு குறைந்து விடும், இரத்த அழுத்தம் குறைந்து விடும், உடலின் பகுதிகளில், குறிப்பாக கை, கால் பகுதிகளில் நீலம் பூக்கும், உடலியலைக் குறித்தும், பாலியலைக் குறித்தும் ஆசையும், எண்ணமும் ஏற்படாது, மனது பக்குவப்படாத நிலையில் இருப்பார்கள்.

இந்த அறிகுறிகளை வைத்தும், உடல் மெலிவதற்கும், மாதவிடாய் நின்று போவதற்கும் வேறு காரணங்களும் இல்லாததை பரிசோதனையின் மூலம் அறிந்து கொண்டு, குறிப்பிட்டவர்களுக்கு இந்த நோய்தான் என்பதை உறுதியாகக் கூறமுடியும்.

இந்த நோயை ஆரம்பத்திலேயே கண்டு பிடித்து சிகிச்சை செய்து விட்டால், பெருபாலான நோயாளிகளை காப்பாற்றிவிட முடியும்.

### இந்த நோயிலிருந்து பாதுகாப்புப் பெறுதல்?

இந்த நோயைக் கண்டு பிடித்தவுடன் முதலில் நோயாளியின் மனதிலுள்ள பல்வேறு தவறான எண்ணங்களைத் தவிர்க்க வேண்டும். பெரிய மனுஷியாகி விடுவோமோ? அடுத்து என்ன நேரப் போகிறதோ? என்பன போன்ற எண்ணங்களை எல்லாம் விட்டுவிட வேண்டும்.

இதேபோன்றே நோயாளியின் பெற்றோருக்கு இது தொடர்பான விழிப்புணர்வு தகவல்களை முறையாக வழங்க வேண்டும். நோயாளிகள் மறந்தாலும் இவர்கள் மறக்காது அவர்களுக்குத் தகுந்த நேரத்தில் உணவு கொடுக்க வேண்டும். அதுவும் சத்தான உணவுகள், விற்றமின், தாது உப்புகள் எல்லாம் நோயாளியின் உடலின் எடைக்கும், வயதிற்கும், வேலை செய்யும் தன்மைக்கும் ஏற்ப கொடுக்க வேண்டும்.

தகுந்த நேரத்தில் உணவு உண்ணாமையால் ஏற்படும் பின்விளைவுகளையும், விபரீதங்களையும் இவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இவர்களின் வயதுக்கும் உயரத்துக்கும் ஏற்ற எடை அதிகரிக்க முதலில் நடவடிக்கை எடுக்கவேண்டும். படிப்படியாக உடல் எடை கூடி வருமாறு உணவு கொடுக்கப்பட வேண்டும். இவர்கள் உணவு உண்ட பின்பு வாந்தி எடுக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். வீட்டிலும், சுற்றுப்புறத்திலும், நண்பர்களிடத்திலும் சுமுகமான உறவு ஏற்படவும், சந்தோஷமான சூழல் நிலவவும் சூழலைப் பேண வேண்டும்.

டாக்டர்
முத்துச் செல்லக்குமார்
ஆனு




# சிரிப்பும் சிந்தனையும் தெறிக்கும் சிரித்திரன்!

(தாயக மண்ணில் இலக்கியப் பணியாற்றிய சிரித்திரன் சுந்தர் மார்ச் 3, 1996 இல் மறைந்தார. அவரது நினைவாகப் பிரசுரமாகிறது.)

- ஐங்கரன் விக்கினேஸ்வரா -

நாற்பது வருடங்களுக்கு மேலாக கேலிச் சித்திரத்துறையில் தனது ஆளுமையைச் செலுத்திய சிரித்திரன் சுந்தர் பதினைந்து ஆயிரத்திற்கு மேற்பட்ட கேலிச்சித்திரங்களைத் தீட்டியுள்ளார். 'செய்தொழில் தெய்வம், சிரிப்பே சீவியம்' என்பதைத் தாரக மந்திரமாகக் கொண்டு கலை இலக்கிய வானில் பறந்து திரிந்தவர் சிரித்திரன் சுந்தர் என்று அழைக்கப்படும் மாமனிதர் சிவஞானசுந்தரம். மார்ச் 3 ,1924 இல் பிறந்த அவர் மார்ச் 3 , 1996 இல் மறைந்தார்.

கேலிச் சித்திரங்கள், பகடிக் கட்டுரைகள் மற்றும் நடைச் சித்திரங்கள் என சிரித்திரனில் சுவைபட இடம்பெற்றன. சிரித்திரன் சுந்தரின் கேலிச்சித்திர நாயகர்களான சவாரித்தம்பர், சின்னக்குட்டி, மைனர் மச்சான், மயில்வாகனத்தார் போன்றவர்கள் வரலாற்றுப் புகழ் பெற்றவர்கள். 'மகுடி பதில்கள்' என்னும் தலைப்பில் சுந்தர் எழுதிய கேள்வி பதில்கள் என்றும் புகழ்பெற்றன.

## சிரித்திரனும் - சிரிப்பும் சிந்தனையும்

சிரித்திரன், 1963 ஆம் ஆண்டில் சி. சிவஞானசுந்தரத்தால் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட நகைச் சுவை இதழ். அவரின் மறைவு வரை 32 ஆண்டு காலம் தொடர்ந்து வெளிவந்து சாதனை படைத்தது. சிரித்திரன் சஞ்சிகை மூலம் பல எழுத்தாளர்கள் அறிமுகப்படுத்தப்பட்டார்கள். வெறும் சிரிப்புச் சஞ்சிகையாக மட்டுமல்லாமல் சிரிப்புடன் சிந்தனையையும் தூண்டும் பல சிறந்த ஆக்கங்களைப் பிரசுரித்தவர் சுந்தர்.

சிந்தனைச் சிறப்பாலும், கேலிச் சித்திரங்கள், கருத்தோவியங்கள் போன்ற படைப்புக்களாலும் ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் சிரித்திரன் சஞ்சிகை தனியிடத்தைப் பெற்றது. அவரது படைப்புகள் மண்வாசனை உள்ளவையாகவும், பாத்திரங்கள் யாழ்ப்பாணப் பேச்சுவழக்குத் தமிழைச் சுவையாகப் பேசுபவையாகவும் விளங்கின.

தமிழ் மக்களிடையேயுள்ள சாதி வேறுபாடுகள் போன்ற பிற்போக்குத் தனங்கள், மூடக்கொள்கைகளை நகைச் சுவையாக, ஆனால், உறைப்பாகக் குத்திக்காட்டி நையாண்டி செய்தார் சிரித்திரன் சுந்தர்.

## சிரித்திரனில் 'சவாரித்தம்பர்'

சிரித்திரன் சுந்தர் கொழும்பில் இருந்து வெளிவந்த தினகரனில் முதலில் கேலிச்சித்திரக்காரராக (Cartoonist) பணிபுரிந்தார். அக்காலத்தில் 'தினகரன்' பத்திரிகையில் ஆசிரியராக இருந்த க. கைலாசபதியின் அழைப்பை ஏற்று அப்பத்திரிகையில், சுந்தர் 'சவாரித்தம்பர்' என்ற தொடரை வரையத் தொடங்கினார். சவாரித்தம்பர் வாசகரிடையே அமோக வரவேற்பைப் பெற்றது. சவாரித்தம்பருக்காகத் தினகரனை வாங்கியோரும் பலர்.

சவாரித்தம்பர் என்பவர், அக்காலத்தில் கரவெட்டியில் வாழ்ந்து கொண்டிருந்த, முற்போக்கு எண்ணங்கொண்ட ஒரு பெரியார். வண்டில் சவாரி செய்வதில் வல்லவர். சுந்தர் அவரோடு நன்கு பழகியவராக இருந்தார்.

அந்தக் கேலிச் சித்திரங்களை அவர் படித்து, "சிவஞானத்தின்ரை வேலை நல்லாயிருக்கு" என்று சொல்லிச் சிரித்து மகிழ்ந்தவராம். சவாரித்தம்பர் பாத்திரத்தைக் கண்ணியமான பாத்திரமாகவே சுந்தர் படைத்துவந்தார்.

அதில் வந்த சின்னக்குட்டி, பாறி மாமி பாத்திரங்களும் கரவெட்டியில் வாழ்ந்தவர்களே.தினகரன் வார மஞ்சரியில் 'மைனர் மச்சான்', 'சித்திர கானம்' ஆகிய கேலிச் சித்திரத் தொடர்களையும் சுந்தர் வரைந்தார்.

சிரித்திரனை 1963 இல் ஆரம்பித்த சுந்தர் 1970 வரை கொழும்பு பண்டாரநாயக வீதி சுதந்திரன் அச்சகத்திலும், 1970 முதல் 1971 வரை டாம் வீதியில் குமரன் அச்சகத்திலும் அச்சிடப்பட்டது. 1971 முதல் யாழ்ப்பாணம் பிரவுண் வீதியில் ஸ்ரீலங்கா அச்சகத்தில் இருந்து வெளிவரத் தொடங்கியது.

1971 நவம்பர் முதல் சிரித்திரனின் சொந்த அச்சகத்தில் இருந்து வெளியாகியது. போர்க்கால சூழலில் 1995 இல் யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்தபோது சிரித்திரன் இதழ் நிறுத்தப்பட்டது. அடுத்த ஆண்டே ஆசிரியர் சிவஞானசுந்தரம் மறைந்தார்.

மொத்தம் 32 ஆண்டு காலம் தொடர்ந்து சிரித்திரன் வெளிவந்தது.

## எரிக்கப்பட்ட சிரித்திரன்

ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் சிரித்திரன் சஞ்சிகை சிந்தனைச் சிறப்பால் தனக்கென தனியிடத்தை பெற்று இருந்தது. ஆயினும் துயர மிகு நிகழ்வாக சிரித்திரன் அச்சகமும் அலுவலகமும், ஆசிரியரின் நூலகச் சேமிப்பும் 1987 இல் இந்திய அமைதிப்படையால் தீவைத்து எரிக்கப்பட்டன.

சிரித்திரன் இதழாசிரியரின் மகள் வாணி சுந்தர் பதிவுகளின் படி, சிரித்திரன் அலுவலகம் இந்திய அமைதிப்படையினர் தங்குமிடமாக ஆக்ரமிக்கப்பட்டது என்ற தகவல்களையும் வெளிக்கொணர்ந்தார்.

## 1995 யாழ் இடப்பெயர்வு

யாழ்ப்பாணத்தில் 1995 இன்

தொடர்ச்சி▼

# சிரிப்பும் சிந்தனையும் தெறிக்கும் சிரித்திரன்!

தொடர்ச்சி▲

போர்க் கால மாபெரும் இடப்பெயர்வு வரையில் வெளிவந்த சிரித்திரனின் முழு ஆயுள் காலத்தை 32 ஆண்டுகளாக மொத்தம் 318 இதழ்கள் வெளிவந்தன.

சிரித்திரன் சுந்தரின் 'கார்ட்டூன் ஓவிய உலகில் நான்' என்ற சுய சரிதை நூலின் முன்னுரையில் பிரபல எழுத்தாளர் செங்கை ஆழியான் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். 1963ஆம் அண்டில் ஆரம்பிக்கப்பட்ட "சிரித்திரன்" சஞ்சிகை திரு சிவஞானசுந்தரத்தின் மறைவுவரை 32 வருடகாலம் தொடர்ந்து வெளிவந்து சாதனை படைத்தது.

சிரித்திரன் ஆசிரியர் நினைவு மலரில் சிரித்திரன் வரலாற்றை எழுதும் செங்கை ஆழியான் தமிழில் முழுக்கமுழுக்க கேலிச்சித்திரத்துக்காக வெளிவந்த ஒரே இதழ் சிரித்திரன் என்று பெருமையுடன் கூறியுள்ளார்.

பல எழுத்தாளர்களையும் அறிமுகம் செய்த சிரித்திரன் புதுக் கவிதைகளையும் சிறுகதைகளையும் தொடர்கதைகளையும் வெளியிட்டது. சிரித்திரன் சஞ்சிகை மூலம் புகழ் பெற்ற பல எழுத்தாளர்கள் இன்று உலகில் பலர் பவனி வந்து கொண்டிருக்கிறார்கள். திக்குவல்லை கமால், திக்கவயல் தர்மகுலசிங்கம் (சுவைத்திரள் ஆசிரியர்), காசி ஆனந்தன், யாழ் நங்கை ஆகியோர் சிரித்திரனில் எழுதிய ஆரம்ப கால எழுத்தாளர்கள். எஸ். அகஸ்தியர், டானியல் அன்ரனி, சுதாராஜ், அமிர்தகழியான், நவாலியூர் சச்சிதானந்தன், தெளிவத்தை ஜோசப் என பலருக்கு களம் அமைத்துக் கொடுத்தது சிரித்திரன்.

மலையகப் படைப்பாளி ராகுலனின் "ஒய்யப்பங் கங்காணி", செங்கை ஆழியானின் "ஆச்சி பயணம் போகிறாள்", "கொத்தியின் காதல்" ஆகிய புகழ்பெற்ற படைப்புகள் சிரித்திரனால் வெளியிடப்பட்டன.

அத்துடன் காசி ஆனந்தனின் இலட்சியத் தாகம் மிகுந்த "மர்மக் கதைகள்" பிரசித்தமானவை. குடாரப்பூர் சிவா "நடுநிசி" என்ற மர்மக் கதையை எழுதினார். மாஸ்டர் சிவலிங்கத்தின் விண்ணுலகத்திலே எனும் சிறுவர் கதை, அ. ந. கந்தசாமியின் கதைகள் போன்றவை இவற்றுள் சில படைப்புகள் சிரித்திரனால் வெளியிடப்பட்டன.

மலையகப் படைப்பாளி ராகுலனின் "ஒய்யப்பங் கங்காணி" அன்றைய அரசியல்வாதிகளை உலுக்கியது. செங்கை ஆழியானின் "ஆச்சி பயணம் போகிறாள்", "கொத்தியின் காதல்" ஆகியன புகழ் பெற்றவை.

## 'பிளித்ஸ்' ஆங்கில சஞ்சிகையில்


சிவஞானசுந்தரத்தின் கேலிச் சித்திரம் முதன்முதலாக, இந்தியாவில் ஏராளமான வாசகர்களைக் கொண்ட 'பிளித்ஸ்' (Blitz) என்னும் ஆங்கிலச் சஞ்சிகையில் வெளியானது. தொடர்ந்து கரஞ்சியா ஆசிரியராக இருந்த 'கொஞ்ச்' சஞ்சிகையிலும், அவரது கேலிச் சித்திரங்கள் பல வெளிவந்தன. அதன் மூலம் பிரபல கேலிச் சித்திரக் கலைஞர்களான போல் தாக்கரே, ஆர். கே. லக்ஷ்மணன் ஆகியோருடன் அறிமுகம் ஏற்பட்டு, அவர்களுடன் கேலிச் சித்திரம் பற்றி உரையாடி வந்தார்.

இதன்பின் அவர் இலங்கை வந்து, அரசாங்க கட்டடத் திணைக்களத்தில் படவரைஞராகப் பணிபுரிந்து வந்தார்.

சிரித்திரன் சுந்தர் என்றவுடனே முகத்தில் புன்னகை அரும்பும் நெற்றியில் சிந்தனைக் கோடுகள் வரைபடமாகும்.'மகுடி பதில்கள்' என்று மகுடமிட்டு சுந்தர் எழுதிய கேள்வி பதில்கள் ஒரு காலத்தில் பத்திரிகை உலகில் பலராலும் பேசப்பட்டு வந்தது.

புதுப்புதுத் தலைப்புகளில் சிந்தனைத் துளிகளைத் தீட்டி, சிரித்திரனை அவர் அழகுசெய்தார். 'பல்லி சொன்னதும் செய்தி சொன்னதும்', 'சிரித்திரன் டயறி', 'ஜோக்கிறட்டீஸ்' முதலியவற்றை உதாரணங்களாகக் கூறலாம். 'மிஸ்டர் அன் மிஸ்ஸிஸ் டாமோடிறன்', 'மகுடி பதில்கள்' என்பன சிரித்திரனுக்கு உரிய சிறப்பு முத்திரைகள் ஆகும். அவர் சுகயீனமுற்று, ஒரு கையும் ஒரு காலும் வழங்க முடியாத நிலையிலும் தொடர்ந்து எழுதினார். கேலிச் சித்திரங்கள் தொடர்ந்து வரைந்தார்.

சிரித்திரன் நகைச்சுவைகளை மாத்திரம் தாங்கி வரவில்லை. தரமான சிறுகதைகள், குறுநாவல்கள், இலக்கியக் கட்டுரைகள், கலைஞர்களுடனான நேர்காணல்கள் முதலிய ஆக்கங்களும் அதனை அழகுசெய்தன. சிரித்திரன் நேர்காணல்கள் அடங்கிய நூலை, 'தேன்பொழுது' என்ற பெயரில் சுந்தர் வெளியிட்டார். வேறு ஆக்கங்களும் பல நூலாக வெளியிடப்பட்டுள்ளன.



'சிரித்திரன் சித்திரக் கொத்து' என்ற கேலிச் சித்திரத் தொகுதியை, 1989 ஆம் ஆண்டு சுந்தர் வெளியிட்டார். 'மகுடி பதில்கள்', 'கார்ட்டூன் உலகில் நான்' ஆகிய நூல்களும் வெளிவந்துள்ளன.

தாயக மண்ணில் இலக்கியப் பணிக்கு ஆற்றிய அளப்பரிய சேவைக்காக தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களால் மாமனிதர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர் சிரித்திரன் சுந்தர் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

## சிரித்திரன் மீள்பதிப்பு

சிரித்திரன் இதழ் Centre for Creativity and Innovation நிறுவனத்தால் மீளவும் புதுப் பொலிவுடன் அச்சிலும், இணையத்திலும் பதிப்பிக்கப்பட்டு 2021 ஜனவரி முதல் யாழ்ப்பாணத்தில் இருந்து உலகெங்கும் கிடைக்க கூடிய வகையில் வெளியிடப்பட்டு வருகின்றது. siriththiran.com எனும் இணைய விலாசத்திலிருந்து தற்போது வெளி வருகிறது.

# கல்முனை வலயத்தின் சாதனை!



(நூருல் ஹுதா உமர்)

2023 இல் நடைபெற்ற தேசிய மட்ட சமூக விஞ்ஞான போட்டியில் கிழக்கு மாகாணத்தில் முதலிடம் 04 மாணவர்களும், இரண்டாம் இடம் 11 மாணவர்களும், மூன்றாம் இடம் 08 மாணவர்களுமாக 23 இடங்கள் கிடைக்கப் பெற்றிருக்கின்றன. இதன் அடிப்படையில் 17 வலயங்களில் 09 வலயங்கள் 1ஆம், 2ஆம், 3ஆம் இடங்களைப் பெற்றுள்ளன. இதில் கல்முனை கல்வி வலயம் ஐந்து இடங்களை பெற்று மாகாணத்தில் முதலாவது இடத்தை பெற்றுள்ளது.

இதில் கல்முனை கல்வி மாவட்டத்துக்கான ஒன்பது இடங்களில் கல்முனை கல்வி வலயம் ஐந்து இடங்களை பெற்று கல்முனை கல்வி மாவட்டத்திலும் முதலாவது இடத்தை பெற்றுள்ளது. அதில் கல்முனை வலயம் 05 இடங்கள், சம்மாந்துறை வலயம் 02 இடங்கள், அக்கரைப்பற்று வலயம் 02 இடங்கள் பெற்றுள்ளன.

இந்த வெற்றிக்கு ஒத்துழைப்பு வழங்கிய பாடசாலை அதிபர்களுக்கும், சமூக விஞ்ஞான பாடங்களை கற்பித்த ஆசிரியர்களுக்கும், சமூக விஞ்ஞான போட்டிக்கு மாணவர்களை தயார்படுத்திய ஆசிரியர்களுக்கும், வலயத்தின் விடய இணைப்பாளராக செயற்பட்ட ஆசிரிய ஆலோசகர் பி.டீ. எம். மஹ்றுப், ஆலோசனை வழிகாட்டல்களை வழங்கிய பிரதிக் கல்விப் பணிப்பாளர் காளான பீ.ஜிஹானா ஆலீப், எம்.எச். றியாஸா, ஆசிரிய ஆலோசகர் கே. டேவிட் ஆகியோருக்கு கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம். எஸ். சஹுதுல் நஜீம் நன்றி தெரிவித்துள்ளார்.

# மன்னாரில் உற்பத்தியாகும் விதை நெல்லை இங்கேயே பயன்படுத்த ஆவன செய்யுங்கள்!

## மன்னார் அரச அதிபர் கனகேஸ்வரன் தெரிவிப்பு

(வாஸ் கூஞ்ஞ)

வேறு இடங்களிலிருந்து இங்கு விதை நெல்லைக் கொண்டு வருவதை விடுத்து மன்னாரில் சிறந்த விதை நெல்லு உற்பத்தி இரணை இலுப்பைக் குளத்தில் இடம்பெறுகிறது. இங்குள்ள நெல்லை விதை நெல்லாகப் பாவிப்பதற்கான ஏற்பாடுகளை மன்னார் மாவட்ட விவசாயம் சார்ந்த திணைக்களங்கள் கவனம் செலுத்த வேண்டும்.

இவ்வாறு மன்னார் அரச அதிபர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை (28) மன்னார் இரணை இலுப்பைக்குளத்தில் விவசாய அமைப்பின் ஏற்பாட்டில் நெல் அறுவடை விழா நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட மன்னார் அரச அதிபர் கே.கனகேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

விவசாயம் என்பது எமக்கு மிகவும் முக்கியமான செயற்பாடாகும். விவசாயம் எமது பாரம்பரியமான ஒரு தொழிலும் ஆகும்.

இது இயக்கையுடன் இணைந்து செயல்படும் ஒரு தொழிலாகும். இன்றைய நாளில் இரணைஇலுப்பைக் குளம் விவசாயிகள் தங்கள் பாரம்பரிய முறையிலான செயல்பாட்டை முன்னெடுத்துள்ளனர்.

அதாவது இங்குள்ள விவசாயிகள் அமைப்பினரும் மற்றும் விவசாயிகளும் இன்றைய நாளில் நெல் அறுவடை விழாவை நடத்துகின்றனர்.

நானும் ஒரு விவசாய குடும்பத்தைச் சார்ந்தவன் என்பதால் இந்நிகழ்வில் கலந்துகொள்ள எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தமைக்கு மகிழ்ச்சி அடைகின்றேன்.



இந்த இரணைஇலுப்பைக்குளம் மன்னார் மாவட்டத்தில் மிகவும் தொலைவிலுள்ள ஒரு கிராமம். விவசாய பணிப்பாளர் சொன்னார் இந்த இடத்தில் விவசாயத்துக்கு எந்தவித களைகளும் இல்லாத ஒரு இடம் என்று.

அத்துடன் இங்கு நல்லதொரு விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது எனவும் தெரிவிக்கப்பட்டது.

ஆகவே இந்த இடத்தில் விளையும் நெல்லையே இங்குள்ள விவசாயிகள் விதை நெல்லாகவும் பாவிப்பது சாலச் சிறந்தது.

நாம் வேறு இடங்களிலிருந்து இங்கு விதை நெல்லைக் கொண்டு வருவதை விடுத்து இங்குள்ள நெல்லை விதை நெல்லாக பாவிப்பதற்கான ஏற்பாடுகளை மன்னார் மாவட்ட விவசாயம் சார்ந்த திணைக்களங்கள் கவனம் செலுத்த வேண்டும்.

விவசாயிகள் மிகவும் முக்கியமானவர்கள் என்பது எமக்குத் தெரியும். ஒருவரிலும் தங்கி வாழாது சுயாதீனமாக செயல்படுபவர்கள்.

திருக்குறல் உழவுத் தொழிலின் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டியுள்ளது. மன்னார் மாவட்டம் ஒரு விவசாய மாவட்டம். ஆகவே விவசாயத்தை அபிவிருத்தி செய்யும்போது எமது பொருளாதாரம் விருத்தி அடையும்.

திருக்குறலில் தெரிவிக்கப்பட்டுள்ளதுபோல என்னிடம் ஒன்றுமே இல்லையே என்று கஷ்டப்படுபவர்கள் சொல்லும்போது இந்த பூமித் தாய் தனக்குள்ளே சிரித்துக் கொள்வாளாம்.

அதாவது இங்கு நல்ல வளங்கள் இருக்கும் போது இதைப் பயன்படுத்தத் தெரியாமல் இருக்கின்றார்கள் என்று நினைத்துக் கொள்வாளாம்.

மன்னார் மாவட்டம் நல்ல வளம் கொண்ட மாவட்டம். இதை நாம் தகுந்த முறையில் பயன்படுத்தினால் வறுமை என்பது எம்மிடம் இருக்காது .- என்றார்.



# கல்முனை கடற்கரை பள்ளிவாசல் வீதியை பெரிதாக்கி அழகுபடுத்த நடவடிக்கைகள்!

(நூருல் ஹுதா உமர்)

சர்வதேச ரீதியாகவும், தேசிய ரீதியாகவும் புகழ்பெற்ற கல்முனை நாகூர் ஆண்டகை தர்கா ஷரீஃப் அமைந்துள்ள கல்முனை கடற்கரை பள்ளிவாசலுக்கு முன்னாள் அமைந்துள்ள கடற்கரை வீதி மக்களின் அதிக வருகை காரணமாக போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது.

வெள்ளிக்கிழமைகளில் போக்குவரத்து ஸ்தம்பிதமடைவதையும் கவனத்தில் கொண்டு அந்த வீதியை விசாலமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித்தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் தலைமையின் இந்தக் களவிஜயத்தில் கல்முனை மாநகர சபை ஆணையாளர் அஸ்மி ஆதம்லெப்பை, மாநகர சபையின் பிரதி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே.எச்.ஜௌஸி, கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் எம்.ஏ. ஹலீலுர் ரஹ்மான், நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளர், கல்முனை மாநகர சபை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இதன்போது பொது மக்களின் வாகனங்களின் தரிப்பிடம் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

இந்த வீதியை விரிவாக்கத் தேவையான விடயங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டது. அத்துடன் பிரதேசத்தை மின்விளக்குகள் மற்றும் இருக்கை வசதிகளை கொண்டு அழகுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. தேவையானநிதிஒதுக்கீடும்செய்யப்பட்டுள்ளது. வேலைத்திட்டம் தொடர்பில் மேலதிக நடவடிக்கைகளை கல்முனை மாநகர சபை முன்னெடுக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# முல்லைத்தீவில் - திருக்கேதீச்சரம் நோக்கி ஆன்மீக அறவழிப் பயணம்!

சிவராத்திரி நன்னாளில் திருக்கேதீச்சரத்தை அடையும் வகையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு மூங்கிலாறு கிராமத்தில் உள்ள சிவாலயத்தில் இருந்து ஆன்மீக பாத யாத்திரை ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இந்த பாதயாத்திரையில் அனைவரும் பங்குபற்றுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

இந்த பாத யாத்திரையில் இணைந்து கொள்ள ஆர்வமுள்ள அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மேலதிக தகவல்களுக்கு 0770489305, 0774675795 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கோரிக் விடுக்கப்பட்டுள்ளது.

யாத்திரை தொடர்பான கால அட்டவணையும் அறியத்தந்துள்ளனர்.

04.03.2024 திங்கட்கிழமை மாலை 3.30 மணிக்கு மூங்கிலாறு சிவன் ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகும் இந்த ஆன்மீக யாத்திரை இரவு பரந்தனில் ஓய்வு.

05.03.2024 காலை 5 மணிக்குப் பரந்தனில் இருந்து புறப்பட்டு மதியம் முறிகண்டி பிள்ளையார் கோயிலை அடைதல். மதிய உணவு மாலை யாத்திரையைத் தொடர்ந்து வன்னேரியை அடைந்து அங்கே தங்குதல்.

06.03.2024 காலை 5 மணிக்கு வன்னேரியில் இருந்து புறப்பட்டு மதியம் முழங்காவிலை அடைதல். மதிய உணவின் பின்னர் அங்கிருந்து புறப்பட்டு இரவு இலுப்பைக்கடவையில் தங்குதல்.

07.03.2024 காலை இலுப்பைக் கடவையில் இருந்து காலை 5 மணிக்கு திருக்கேதீச்சரம் நோக்கிப் புறப்பட்டு இரவு கோயிலை அடைதல்.



# இம்றை உயர்தரப் பரீட்சை எழுதிய மாணவருக்குத் தொழில் வழிகாட்டல்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

இந்த முறை க.பொ.த. உயர்தரப் பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு கல்வி அமைச்சால் 3 மாத தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட இருக்கின்றது.

இந்த நிகழ்வுக்கு முன்னோடியாக பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் திறன்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

பயிற்றுனர்களை பயிற்றுவிக்கும் மட்டக்களப்பு சிமாட் ஸ்ரீலங்கா அலுவலகத்தில் கல்வி அமைச்சால் ஒழுங்கமைக்கப்பட்டு உதவி மாவட்ட செயலாளரின் வழிகாட்டலில் பயிற்சிகள் நடைபெற்றன.

இந்த நிகழ்வுக்கு வளவாளர்களாக அமைச்சால் பயிற்றுவிக்கப்பட்ட பயிற்றுனர்களான மாவட்ட இணைப்பாளர் க.சிவகுமார், திறன்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் தி.திபாகரன் ஆகியோர் பங்குபற்றினர்.



# நுவரெலியா – பூண்டுலோயா பிரதான வீதிக்குக் ‘காப்பெட்’!

(தலவாக்கலை)

இடைநிறுத்தப்பட்டிருந்த நுவரெலியா – பூண்டுலோயா இடையேயான பிரதான வீதி ‘காப்பெட்’ இடும் பணி இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முயற்சியில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ் நிலையின் காரணமாக இந்த வேலை திட்டம் இடை நடுவே கைவிடப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பிரதேச மக்கள் அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் மருதுபாண்டி ராமேஸ்வரன் ஆகியோரிடம் முன்வைத்த கோரிக்கைக்கு இணங்க இந்தப் பாதையை செப்பனிடும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் 2024 இல் 1500 கிலோ மீற்றர் ‘காப்பெட்’ வீதி அமைக்கும் திட்டத்தின் கீழ் சுமார் 13 கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டில் நுவரெலியா பூண்டுலோயா பிரதான வீதியின் புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதி பொதுச் செயலாளர் எம்.எஸ்.எஸ். செல்லமுத்து, பிரதித் தேசிய அமைப்பாளர் பழனி சசிகுமார், கொத்மலை பிரதேச அமைப்பாளர் மூர்த்தி மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# சந்தாங்கேணி மைதான நீச்சல் தடாகத்தை ஜூ ன் மாதத்துக்கு முன்னர் திறக்க ஏற்பாடு!

(நூருல் ஹுதா உமர் )

கல்முனை சந்தாங்கேணி பொது விளையாட்டு மைதான நீச்சல் தடாகத்தை எதிர்வரும் ஜூன் மாதத்துக்கு முன்னர் மக்கள் பாவனைக்குக் கையளிக்கும் விதமாக நிர்மாணப் பணிகள் முடுக்கிவிடப்பட்டு வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

விளையாட்டுத்துறை அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், விளையாட்டுத்துறை முன்னாள் பிரதிய மைச்சருமான, நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸின் முயற்சியால் இதன் வேலைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இந்த நீச்சல் தடாக நிர்மாணப் பணிகளை முடிவுக்கு கொண்டுவர தேவையான மிகுதி நிதி ஒதுக்கீடுகளை நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸின் வேண்டுகோளின் பேரில் விளையாட்டுத்துறை அமைச்சு ஒதுக்கியுள்ளது.

நீச்சல்தடாக நிர்மாண பணிகளை களவிஜயம் செய்து பார்வையிட்ட நாடாளுமன்ற உறுப்பினர், நிர்மாணப் பணிகளைத் துரிதகதியில் முடிவுக்கு கொண்டுவரவேண்டிய அவசியம் குறித்து ஒப்பந்தக்காரர்களுக்கு தெளிவுபடுத்தினார்.

இந்த களவிஜயத்தில் கல்முனை மாநகர சபை ஆணையாளர் அஸ்மி ஆதம்லெப்பை, மாநகர சபையின் பிரதி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே. எச்.ஜெளஸி, கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் எம்.ஏ. ஹலீலுர் ரஹ்மான், நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளர்கள் உட்பட கல்முனை மாநகர சபை அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# மட்டக்களப்பில் இலக்கிய நிகழ்வுகள்!



(பழுவூரான்)

மகுடம் கலை இலக்கிய வட்டம் நடத்திய பௌர்ணமி கலை இலக்கிய நிகழ்வு-52 மற்றும் 53 என்பன நேற்றுச் சனிக்கிழமை (02) காலை மற்றும் மாலை நிகழ்வுகளாக மட்டக்களப்பு பொதுநூலக கூடத்தில் இடம்பெற்றன.

இதன் அடிப்படையில் கனடா, இந்தியா மற்றும் இலங்கை என மூன்று இடங்களில் ஒரே நேரத்தில் அச்சாகும் “தாய்வீடு” இதழின் அறிமுகமும் கருத்துப் பகிர்வும் காலை நிகழ்வாக கிழக்குப் பல்கலைக்கழகப் பேராசிரியர் சி.சந்திரசேகரம் தலைமையில் அரங்கேற்றப்பட்டன.

இந்த நிகழ்வில், முதன்மை விருந்தினராக கனடா “தாய்வீடு” இதழ் ஆலோசகர் பொன்னையா விவேகானந்தன் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் வரவேற்புரையையும் தொடக்கவுரையையும் இணைத்ததாக மகுடம் வி.மைக்கல்கொலின் உரை நிகழ்த்தினார்.

இதழ் தொடர்பான கருத்துப் பகிர்வை கவிஞர் ஜிஃப்ரி ஹாசனும், எழுத்தாளர் ச.மணிசேகரனும் நிகழ்த்தினர்.

நிகழ்வின் இறுதியாக ஊடகவியலாளர் தேவ.அதிரன் நன்றியுரையாற்றினார்.

மாலை நிகழ்வாக யோர்ச் அருளானந்தத்தின் “மண்ணும் மனிதர்களும்” சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியிடப்பட்டது.

மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் விநாயகமூர்த்தி றஞ்சிதமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், முதன்மை விருந்தினராக கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் மா.செல்வராசாவும், சிறப்பு விருந்தினராக கிழக்குப் பல்கலைக்கழக தமிழ்க் கற்கைகள் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி றூபி வலன்றீனா பிரான்சிஸும் கலந்து கொண்டனர்.

தமிழர்களின் பாரம்பரியத்தை வெளிக்கொணரும் வகையில் மங்கல விளக்கேற்றலுடன் இந்த நூல் அரங்கேற்றம் ஆரம்பமானது.


இதன்போது வரவேற்புரையையும், தொடக்கவுரையையும் இணைத்ததாக மகுடம் வி.மைக்கல்கொலினும், நூல் அறிமுக உரையைக் கதிரவன் த.இன்பராசாவும் நிகழ்த்தினர்.



ராபர்ட் பயாஸ்



ஜெயக்குமார்



முருகன்

# ராபர்ட் பயாஸ், ஜெயகுமார், முருகனை இலங்கைக்கு அனுப்புமாறு கோரிக்கை

## சாந்தன் உயிரிழந்த நிலையில் முதலமைச்சரிடம் கேட்கிறார் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி



தமிழக சிறையில் 32 ஆண்டு கால சிறை வாசம் அனுபவித்த இலங்கைத் தமிழர்களான ராபர்ட் பயாஸ், ஜெயகுமார் மற்றும் முருகன் ஆகியோரை தங்கள் சொந்த நாட்டுக்கு அல்லது அயல் நாடுகளுக்கு அனுப்ப முதலமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கோரியுள்ளார்.

தமிழக சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டு திருச்சி சிறப்பு முகாமில் இருந்த சாந்தன் உயிரிழந்த நிலையில், எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

தமிழக சிறையில் 32 ஆண்டு கால நீண்ட சிறை வாசம் அனுபவித்த இலங்கைத் தமிழர்களான ராபர்ட் பயாஸ், ஜெயகுமார், முருகன் மற்றும் சாந்தன் ஆகியோர் கடந்த 2022 ஆம் ஆண்டு நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர் என்பதையும் எடப்பாடி பழனிசாமி நினைவூட்டியுள்ளார்.

இந்தியாவின் அயல் நாடான இலங்கைக்கு அனுப்பும்வரை குறித்த தரப்பினரின் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்காக திருச்சி சிறப்பு முகாமில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்த நிலையில், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த சாந்தன் உடல்நலக் குறைவால் உயிரிழந்தார். இது தமிழக மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், 32 ஆண்டுகள் சிறையில் வாழ்க்கையை இழந்தவர்கள், விடுதலைக் காற்றை சுவாசிக்கப் போகிறோம் என்று பெருமூச்சு விடும் போது, மீண்டும் சிறப்பு முகாம் எனும் கொடூரம் அவர்களது வாழ்க்கையில் அரங்கேறும் என்று விடுதலை செய்யப்பட்ட நால்வரும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள் என்றும் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

விடுதலையானதை தொடர்ந்து, குறித்த தரப்பினர் அவர்களை வெளிநாடுகளுக்கு நாடு கடத்துமாறு கோரியிருந்தாலும், இன்றுவரை அவர்களது கோரிக்கைகளுக்கான பதில் கிடைக்கவில்லை எனவும் சம்பந்தப்பட்ட அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த சாந்தன் உடல்நலக் குறைவால் உயிரிழந்ததை கருத்தில் கொண்டு, இனியாவது மீதமுள்ள மூவரினதும் கோரிக்கைகளுக்கு பதிலளிக்க தமிழக முதலமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென எடப்படி பழனிசாமி கோரியுள்ளார்.

கண் பார்வை குறைபாடு ஏற்பட்டு தவறான சிகிச்சையில் ஒரு கண்ணில் பார்வையை இழந்த ஜெயகுமார் மற்றும் உடல்நலக் குறைவால் அவதியுறும் ராபர்ட் பயாஸ் மற்றும் முருகன் ஆகியோரது கடைசி காலத்தில், எஞ்சிய வாழ்நாளை அவர்களுடைய குடும்பத்தினருடன் வசிப்பதற்கு இந்திய வெளியுறவுத் துறையையும், தி.மு.க. அரசின் முதலமைச்சரும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.




# உலகில் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதார நாடு இந்தியாதான்!

## மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாம்

உலகிலேயே வேகமாக வளர்ந்து வரும் பொருளாதார நாடு இந்தியாதான் என்பதை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

2023 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டில் இந்தியாவின் பொருளாதாரம் 8.4 வீதமாக வளர்ச்சியடைந்துள்ளது என்று சமீபத்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

2024 ஆம் ஆண்டு இந்தியப் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், பொருளாதார வளர்ச்சி குறித்த இந்தத் தகவல் மோடியின் அரசுக்கு சாதகமான சூழ்நிலையை உருவாக்கும் என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ஜப்பான் மற்றும் ஜேர்மனியை பின்னுக்கு தள்ளிவிட்டு உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா விரைவில் மாறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை நாட்டின் உற்பத்தித் துறையின் விதிவிலக்கான வளர்ச்சி இந்தியப் பொருளாதாரத்துக்குப் பெரும் பலமாக இருந்திருக்கிறது என்று தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# போதைப் பொருள் வழக்கில் தேடப்படும் ஜபார் சாதிக்கின் வங்கிக் கணக்கு முடக்கம்

2,000 கோடி போதைப் பொருள் வழக்கில் தேடப்படும் சென்னையைச் சேர்ந்த முன்னாள் திமுக நிர்வா நிர்கி ஜாபார்சாதிக்கின் வங்கிக் கணக்குகளை மத்திய போதைப் பொருள் கடத்தல் தடுப்பு பிரிவு முடக்கியது.

மத்திய போதை ப் பொருள் கடத்தல் தடுப்புப் பிரிவும், டில்லி பொலிஸாரும் இணைந்து, கடந்த 15 ஆம் திகதி மேற்கு டில்லியில் உள்ள கை லாஷ் பார்க் பகுதியில் ஒரு தனியார் கிடங்கில் சோதனை நடத்தி, மெத்தம்பெட்டட்மைன் எனும் போதைப் பொருள் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் 50 கிலோ சூடோஎபிட்ரிட்னை பறிமுதல் செய்தன.



இது தொடர்பில் அங்கிருந்த 3 பேர் கைது செய்யப்பட்டனர். விசாரணையில், அந்தக் கும்பல் கடந்த 3 ஆண்டுகளில் 2,000 கோடி ரூபா மதிப்புள்ள 3,500 கிலோ சூடோஎபிட்ரிட்னை வெளிநாடுகளுக்கு கடத்தியிருப்பது தெரியவந்தது.

கடத்தல் கும்பலுக்கு மூளையாகச் செயல்பட்டது தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளரும், திமுக சென்னை மேற்கு மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளருமான ஜாபார் சாதிக் என்பதும் தெரியவந்தது.

இந்தத் தகவல் வெளியானதும் திமுகவிலிருந்து ஜாபார் சாதிக் நிரந்த ரமாக நீக்கப்பட்டார்.

இந்த வழக்குத் தொடர்பான விசார ணைக்கு நேரில் ஆஜராகுமாறு அழைப்பாணை வழங்கப்பட்டும், ஜாபார் சாதிக் ஆஜராகவில்லை. இந்த நிலையில், கடந்த புதன்கிழமை ஜாபார் சாதிக் வீட்டின் பூட்டை உடைத்துத் என்சிபி அதிகாரிகள் திடீர் சோதனை செய்தனர். இதன் போது பல முக்கிய ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்றும் அவரது வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# தென் மாநிலங்களில் 50 - 50 திட்டம்; பா.ஜ.க. வியூகம் கைகொடுக்குமா?

2024 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் 400 தொகுதிகளில் வெல்ல வேண்டும் என முனைப்புக் காட்டி வருகிறது பா.ஜ.க. இன்னும் எதிர்க் கட்சிகள் தொகுதிப் பங்கீட்டை இறுதி செய்யாத நிலையில், பா.ஜ.க. தனது முதல்கட்ட வேட்பாளர் பட்டியலை வெளியிட்டிருக்கிறது. அதில் மோடி, அமித் ஷா உள்ளிட்ட முக்கியமான நட்சத்திர வேட்பாளர்கள் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. தென்னிந்தியாவைப் பொறுத்தவரை கேரளா, தெலங்கானா மாநிலம் மட்டுமே முதல்கட்ட வேட்பாளர் பட்டியலில் இடம் பெற்றிருந்தது . முதல்கட்ட வேட்பாளர்கள் பட்டியல் வட இந்தியாவை மையப் படுத்தியே இருந்தது.

மக்களவைத் தேர்தலுக்கான திகதிகளை இந்திய தலைமைத் தேர்தல் ஆணையம் அறிவிப்பதற்கு முன்னதாகவே பா.ஜ.க. தனது முதல்கட்ட வேட்பாளர் பட்டியலை வெளியிடத் தீவிரம் காட்டியது. கடந்த மக்களைவைத் தேர்தலிலும் பா.ஜ.க. இப்படியான யுக்தியைக் கையாண்டமை குறிப்பிடதக்கது. இன்னும் பல மாநிலங்களில் எதிர்க்கட்சிகளின் கூட்டணி உறுதியாகாத நிலையில், பா.ஜ.க. முதல்கட்ட வேட்பாளர் பட்டியலை நேற்று (02) வெளியிட்டது.

இந்தப் பட்டியலில் 34 மத்திய அமைச்சர்கள் இடம்பெற்றுள்ளனர். இதில் மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா மற்றும் 2 முன்னாள் முதல்வர்களின் பெயரும் இடம்பெற்றுள்ளன. முதல்கட்ட வேட்பாளர் பட்டியலில் மொத்தமுள்ள 195 பேரில் 28 பெண்கள், 47 வேட்பாளர்கள் 50 வயதுக் குட்பட்டவர்கள், 57 பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த வேட்பாளர்கள், 27 பட்டியலின வேட்பாளர்கள், 18 பழங்குடியின வேட்பாளர்கள் ஆவர்.

தவிர, தென்னிந்தியாவில் பா.ஜ.க. எதிர்ப்பார்த்த முன்னேற்றம் கிடைக்குமா என்பது சந்தேகம்தான். எனவே, வட இந்தியாவை மையப்படுத்தி வெற்றி வாய்ப்புகளை அதிகரிக்க பா.ஜ.க. முயன்று வருகிறது. இதனால், முதல்கட்ட வேட்பாளர்கள் வட இந்திய தொகுதிகளில் அதிகமாக அறிவிக்கப் பட்டுள்ளனர். தென்னிந்தியாவை பொறுத்தவரை கேரளா, தெலங்கானா மட்டுமே இடம்பெற்றிருந்தது.

பா.ஜ.கவின் திட்டம் குறிப்பாக, கடந்த வாரம் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, கட்சியின் தேசியத் தலைவர் நட்டா, உபி முதல்வர் யோகி ஆதித்யநாத் ஆகியோர் பாஜகவுக்கு சாதகமற்ற தொகுதிகள் பற்றி ஆலோசனை நடத்தியிருந்தனர் . இதனால், மக்களவைத் தேர்தல் திகதிகள் அறிவிக்கப்படும். முன்னதாக உத்தரப் பிரதேசம் உட்பட பிற வட மாநிலங்களில் தங்கள் செல்வாக்கு குறைந்த மக்களவைத் தொகுதிகளுக்கான வேட்பாளர்கள் பட்டியலை முதலில் வெளியிட பா.ஜ.க. திட்டமிட்டிருந்தது.

அதன்படிஉத்தரப் பிரதேசத்தில் 51, மேற்கு வங்கத்தில் 20, மத்தியப் பிரதேசத்தில் 24, குஜராத் மற்றும் ராஜஸ்தானில் தலா 15, கேரளாவில் 12, தெலங்கானாவில் 9, அசாமில் 11, ஜார்க்கண்ட் மற்றும் சத்தீஸ்கரில் தலா 11 டெல்லியில் 5 , ஜம்மூ காஷ்மீரில் 2, உத்தராகண்டில் 3, அருணாச்சல் பிரதேசத்தில் 2, கோவா, திரிபுரா ஆகியவற்றில் தலா ஒரு தொகுதி என மொத்தமாக 195 வேட்பாளர்களை முதல்கட்டமாக அறிவித்துள்ளது பா.ஜ.க.

'50-50' என்னும் அடிப்படையில், வெற்றி வாய்ப்பு குறைவாக இருக்கும் தென்னிந்தியாவைக் கவனித்தில் கொள்வதற்கு பதிலாக, வடமாநிலங்களில் தேர்தல் பணிகளில் தீவிரம் காட்டி அதிக தொகுதிகளில் வெல்ல காய்களை நகர்த்தி வருகிறது பா.ஜ.க. அதன் முன்னோட்டமாகத்தான் முதல்கட்ட வேட்பாளர் பட்டியலை வட இந்தியாவை மையப்படுத்தி அறிவித்திருக்கிறது. ஆனால், இது பா.ஜ.கவுக்கு கைகொடுக்குமா? என்று பல்வேறு தரப்பிலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# சீனாவிடம் அணு ஆயுதப் பொருளை கொள்வனவு செய்கிறது பாகிஸ்தான்!

சீனாவில் இருந்து சட்டவிரோதமான முறையில் அணு ஆயுத பொருள்களை பாகிஸ்தான் பெற்று ரொக்கெட் உற்பத்திகளுக்கு பயன்படுத்த திட்டமிட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

சீனாவில் இருந்து பாகிஸ்தானின் கராச்சி நகரை நோக்கி சென்ற சி.எம்.ஏ. சி.ஜி.எம். ஆட்டிலா என்ற வர்த்தக கப்பல் ஒன்று மும்பை நவசேவா துறைமுகம் பகுதியில் இந்திய பாதுகாப்பு அதிகாரிகளால் தடுத்து நிறுத்தப்பட்டது.

குறித்த கப்பலானது, உளவுப் பிரிவின் அடிப்படையில் கிடைக்கப்பெற்ற தகவலின் படி சோதனையிடப்பட்டது.

மால்டா நாட்டு கொடியுடன் தடுத்து நிறுத்தப்பட்ட அந்த கப்பலில் அணு ஆயுத திட்டத்துக்குப் பயன்படுத்தப்படகூடிய பொருள்கள் கொண்டு வரப்பட்டிருக்கலாம் என்று அதிகாரிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

அதனை தொடர்ந்து, மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில் கப்பலில், இத்தாலி நாட்டு நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்பட்ட கணினியால் கட்டுப்படுத்தக் கூடிய சி.என்.சி. இயந்திரம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, கண்டறியப்பட்ட பொருள்களை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பை சேர்ந்த குழுவினரும் ஆய்வு செய்த நிலையில், அணு ஆயுத திட்டத்துக்குப் பாகிஸ்தான் இதனை பயன்படுத்த கூடும் என அதிகாரிகள் தரப்பில் உறுதிசெய்துள்ளனர்.

இந்தப் பொருள்கள், பாகிஸ்தானின் இராணுவ வளர்ச்சித் திட்டத்துக்கான முக்கிய பொருள்களை உருவாக்குவதற்கு பயன்படுத்தப்படும் என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

# மிகப்பெரிய விமான நிலையத்தை அமைத்து வருகிறது சவுதி அரேபியா


உலகிலேயே மிகப்பெரிய விமான நிலையத்தை அரபு நாடான சவுதி அரேபியா அமைத்து வருகிறது.

சவுதி தலைநகரான ரியாத்தில் கிங் சல்மான் என்ற இந்த சர்வதேச விமான நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது.

அதில் சுமார் 57 சதுர கிலோமீற்றர்கள் பரப்பளவு கொண்ட ஆறு ஓடுபாதைகள் அமைக்கப்படவுள்ளன.

அத்துடன், கிங் சல்மான் சர்வதேச விமான நிலையம் அப்பகுதியில் சுமார் 150,000 வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் எதிர்பார்ப்பதாக கூறப்படுகிறது.

2030 ஆண்டு இந்த விமான நிலையம் திறக்கப்படுமாயின் சுமார் 12 கோடி பயணிகள் பயணம் செய்ய ஏற்ற வசதிகள் காணப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.



அத்தோடு, சவூதி அரேபியாவின் எல்லையை ஒட்டிய ஏமனில் மோதல்கள் நடந்து கொண்டிருந்தாலும், ரியாத் போன்ற இடங்கள் பயணத்துக்குக் பாதுகாப்பான பிரதேசங்களாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



# ஹவுதிகளால் தாக்குதலுக்குள்ளான நிலையில் மூழ்கி வருகிறது பிரித்தானிய வர்த்தகக் கப்பல்!

ஈரானிய ஆதரவு அமைப்பான ஹவுதிகளால் தாக்குதலுக்குள்ளான பிரித்தானிய வர்த்தக கப்பல் ஒன்று செங்கடலில் மூழ்குகிறது என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

சுமார் 2 வாரங்களுக்கு முன்னர் Rubymar என்ற பிரித்தானிய சரக்கு கப்பல் ஹவுதி அமைப்பின் தாக்குதலுக்குள்ளானது.

ஐக்கிய அரபு அமீரகத்தின் Khor Fakkan பகுதியில் இருந்து பல்கேரியாவின் வர்ணா பகுதிக்கு புறப்பட்டு சென்ற போது சுரடிலஅயச சரக்கு கப்பலானது தாக்கப்பட்டது.

எவ்வாறாயினும், தாக்குதலின் போது கப்பலில் இருந்த ஊழியர்களை பிரித்தானிய இராணுவத்தினர் மீட்டுள்ளனர்.

ஆனாலும், தற்போது குறித்த கப்பலை கைவிடும் நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் பிரித்தானியாவின் UKMTO அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், ஹவுதிகளின் ராணுவ செய்தித் தொடர்பாளர் Yahya Saree விடுத்த அறிக்கையில், Rubymar சரக்கு கப்பல் மிக மோசமாக சேதமடைந்துள்ளது. மூழ்கும் நிலையில் உள்ளது என்று தெரிவித்திருந்தார்.

அத்தோடு, காசா பகுதியில் இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதல்களுக்கு பதிலடியாக ஹவுதி அமைப்பு செங்கடல் வழியாக செல்லும் இஸ்ரெலுடன் தொடர்புடைய சரக்கு கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# காசா மக்களுக்கு தேவையான உணவை காசாவுக்குள் போடுவதற்கு அமெ. முடிவு!

அமெரிக்கா, ஜோர்டானுடன் இணைந்து காசா மக்களுக்கு தேவையான உணவு மற்றும் நிவாரண பொருள்களை விமானங்கள் மூலமாக 'ஏர் டிராப்' செய்ய முடிவு செய்துள்ளது என்று தெரிவித்துள்ளது.

இராணுவ விமானங்களை பயன்படுத்தி 38,000 பெறுமதியான உணவுகளை காசாவுக்குள் எறிய அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

அங்குள் மக்கள் உணவு இன்றிப் பட்டினிச் சாவை எதிர்கொண்டுள்ள நிலையில் அமெரிக்கா இந்த முடிவுக்கு வந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ரஃபா நகரில் உள்ள இடம்பெயர்ந்த மக்கள் வசிக்கும் பகுதியில் இஸ்ரேலிய விமானத் தாக்குதலில் குறைந்தது 11 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 50 பேர் காயமடைந்தனர் என்று சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இரு தரப்பு போரை நிறுத்தக்கோரி பல்வேறு நாட்டுத் தலைவர்களும் கோரிக்கை வைத்து வருகின்றனர். இருப்பினும் இன்னும் காசாவில் போர் ஓய்ந்தபாடில்லை. நாளுக்கு நாள் உயிர் பலிகள் அதிகரித்து வண்ணம் இருக்கின்றன.

அத்துடன் சிலதினங்களுக்கு முன்னர் காசாவில் உதவிக்காக காத்திருந்த மக்கள் மீது இஸ்ரேல் ராணுவம் துப்பாக்கிச்சூடு நடத்திய துப்பாக்கிச்சூட்டில் சுமார் 104 பாலஸ்தீனர்கள் உயிரிழந்தனர். சுமார் 300 பேர் காயமடைந்தனர்.

மேலும், காசாவில் இதுவரை 30 ஆயிரத்துக்கும் அதிகமான பாலஸ்தீனர்கள் இஸ்ரேலிய இராணுவத் தாக்குதலில் உயிரிழந்துள்ளனர்.

பக்கங்கள் 07

கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 03/03/2024

## அதிக வெப்பமான மாதம் இவ்வருட பெப்ரவரிதான்!

ஒன்ராரியோ, மார்ச்03

கனேடிய வரலாற்றில் வெப்பம் அதிகமான மாதமாக பெப்ரவரி மாதம் பதிவாகியுள்ளது.

டொரன்டோ பெருநகரப் 03




# யாழ் பல்கலை மாணவர்களுக்கு உதவ தயாராகும் கனடா பழைய மாணவர்கள்

## ஐம்பதாவது ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டு ‘பல்கலைச் சங்கமம்’ கலை நிகழ்வு மேயில்

**ஸ்காபுரோ,மார்ச்03**

**யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பொருளாதாரச் சிக்கல் காரணமாக கல்வியைத் தொடர முடியாத மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழுங்குவதற்கும், பட்டப்படிப்பை நிறைவு செய்த மாணவர்களில் தொழில் தொடங்க ஆர்வம் உள்ளவர்களுக்கு முதலீட்டு உதவி வழுங்குவதற்கும்திட்டம்தயாரிக்கப்பட்டுள்ளதாக யாழ் பல்கலைக்கழக பழைய மாணவர் சங்க கனடா கிளையினர் தெரிவித்தனர்.**




யாழ். பல்கலைக்கழகத்தின் 50 ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு பல்கலைக்கழக பழைய மாணவர் சங்க கனடா கிளையினர் நடத்தவுள்ள ‘பல் கலைச் சங்கமம்’ கலை நிகழ்ச்சி பற் றியும், சங்கத்தின் நலன்புரி திட்டங்கள் பற்றியும் விளக்கம் அளிக்கும் ஊடகவி யலாளர் சந்திப்பின் போதே இத்தக வல்களை அவர்கள் தெரிவித்தனர்.

இந்த சந்திப்பு நேற்று சனிக்கிழமை ஸ்காபுரோவில் மில்னர் கோர்ட்டில் நடை பெற்றது .

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் யாழ் பல்கலைக்கழக பழைய மாணவர் சங்க கனடா கிளையின் தலைவர் பாக் கிய ரெஜினோல்ட் நிகோலப்பிள்ளை, உப தலைவர் ஜெ.ராஜதுரை, முன்னாள் தலைவர் சுதாகரன் செல்லத்துரை, செய லாளர் ஷெரின் பாலசிங்கம் உள்ளிட்ட பழையமாணவர் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்

இதன் போது மேலும் தெரிவிக்கப்பட் டவை வருமாறு:-

யாழ் பல்கலைக்கழகத்தையும், யாழ் மக்களையும் வேறுபடுத்திப் பார்க்க முடியாது. யாழ்ப்பாண மக்கள் யாழ் பல்கலைக்கழகத்தைத் தமது பிரதே சத்தின் அடையாளச் சொத்தாகக் கருது கின்றனர். மாணவர்களின் பல்வேறு நலன்புரி திட்டங்களுக்கு பல்கலைக் கழகத்தின் பழையமாணவர் சங்க கனடாக் கிளை உதவி வழங்கியுள்ளது. அதேவேளை எதிர்காலத்தில் பல நலன் புரி திட்டங்களை நடைமுறைப்படுத் தவுள்ளது. இதில் குறிப்பாக பொருளாதார சிக்கல் காரணமாக கல்வியைத் தொடர முடியாத மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கும் திட்டம் ஒன்று நடை முறைப்படுத்தப்படும். பல்கலைக்கழகக் கல்வியை நிறைவு செய்த மாணவர்கள் சுய தொழில் தொடங்க முதலீட்டு உதவி வழங்கவும் திட்டம் தயாரிக்கப்பட்டுள் ளது.

இதற்காக யாழ் பல்கலைக்கழகத்தின் 50 ஆவது ஆண்டு பூர்த்தியை முன் னிட்டு கனடாவில் எதிர்வரும் மே மாதம் 26 ஆம் திகதி பல்கலைச் சங்கமம் கலை நிகழ்சியயை நடத்தவுள்ளோம். இதன் போது சேகரிக்கப்படும் நிதி மேற்கூறிய நலன்புரி திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படும். எனவே யாழ் பல்கலைக்கழக பழையமானவர்கள் மற்றும் பொது மக்கள் அனைவரும் இந்த நிகழ்ச்சிக்கும் எமது சங்கத்தின் நலன்புரி திட்டங்களுக்கும் ஒத்துழைப்பு வழங்குமாறு கோருகிறோம். – என்று தெரிவிக்கப்பட்டது.



# கனடா - இத்தாலி பிரதமர்கள் சந்திப்பு

ஒன்ராரியோ, மார்ச்03

இத்தாலியப் பிரதமர் ஜியோஜியா மெலோனியை கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ டொரன்டோவில் நேற்று (மார்ச்02) சந்தித்தார்.

இரு நாடுகளுக்கு இடையிலான பரவலாக்கப்பட்ட ஒத்துழைப்பு தொடர்பில் இந்தச் சந்திப்பின் போது கவனம் செலுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இரு நாடுகளினதும் அரசியல், பொருளாதார மற்றும் மூலோபாய உறவுகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் இந்தச் சந்திப்பு அமைந்திருந்ததாக இரு தலைவர்களும் இணைந்து வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கலந்துரையாடல்களின் போது, சக்தி பாதுகாப்பு, சக்தி எதிர்காலம், காலநிலை மாற்றம், உயிர்பல்வகைமை, புலம்பெயரல், நிலையான பொருளாதார அபிவிருத்தி மற்றும் ஆய்வு போன்ற விடயங்களில் கவனம் செலுத்தப்பட்டது.




# கியூபெக்கில் அரச மதுசாலைகள் வேலைநிறுத்தத்தால் மூடப்படும்?

## தொழிற்சங்கத் தரப்பில் எச்சரிக்கை

கியூபெக்,மாரச் 03

கியூபெக் மாநில அரசாங்கத்திற்குச் சொந்தமானசிலமதுபானசாலைகளைத் தற்காலிகமாக மூடச் செய்யப் போவதாக 5,000 ஊழியர்களைக் கொண்ட தொழிற்சங்கம் ஒன்று எச்சரித்துள்ளது.

சங்கத்தின் உறுப்பினர்களில் 89 சதவீதமானோர் வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தமையைத் தொடர்ந்தே இந்தத் தொழிற்சங்கம் வேலைநிறுத்தம் செய்யப்போவதாக அறிவித்திருக்கின்றது.

இந்த வரையறுக்கப்பட்ட வேலைநிறுத்தம் 15 நாள்களுக்கு நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கொவிட்-19 பெருந்தொற்று காலப் பகுதி முதல் நகர்ப்புற மதுபான சாலைகளிற்கு வருகின்ற வாடிக்கையாளர்களில் மூர்க்கமாக நடந்து கொள்பவர்களின் எண்ணிக்கை அதிரித்து வருவதால், ஊழியர்களுக்கு இத்தகைய வாடிக்கையாளர்களை கையாள்வதற்கான பயிற்சி, வேலையிட ஆரோக்கியம், பாதுகாப்பு என்பன பிரதான நிபந்தனைகளாக உள்ளன.




# வானவில் நிறங்களின் கொடியை நீக்குகிறது வெஸ்ட்லொக் நகரம்

அல்பேர்ட்டா,மார்ச் 03

வெஸ்ட்லொக் நகரமானது டுபுடீவுஞ கொடியான வானவில் நிறங்களின் கொடியையும், வானவில் பாதசாரி கடவையையும் தடைசெய்வதற்கான துணைசட்டத்தில் வாக்களித்துள்ளது.

இதன் காரணமாக, வெஸ்ட்லொக் பகுதியில் முதன்முறையாக நிறமடிக்கப் பட்டிருந்த வானவில் பாதசாரி கடவை நீக்கப்படவுள்ளதாக அந்நகரத்தின் அமைப்புக்கள் கரிசனை வெளியிட் டுள்ளன.

நகரில் அரசாங்கக் கொடிகளை மாத்திரம் ஏற்றுவதற்கும், பாதசாரி கட வையை வெள்ளை நிறத்தில் மாத்திரம் வைத்திருப்பதற்குமான வாக்கெடுப்பில் ஆதரவாக 663 வாக்குகளும், எதிராக 639 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

வானவில் நிறங்களில் பாதசாரி கடவை, மற்றும் டுபுடீவுஞ கொடி என்பவற்றை நீக்குமாறு கோரியும், சிறுபான்மையினரின் கருத்துக்களுக்கு நகர நிர்வாகம் அக்கறை செலுத்தத் தேவையில்லை எனத் தெரிவித்தும் குழுவொன்று அளித்த மனுவின் அடிப் படையிலேயே இந்த வாக்கெடுப்பு நடத் தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### அதிக வெப்பமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதி மற்றும் ஹெமில்டன் பகுதியில் வெப்பம் நிறைந்த மாதமாக பெப்ரவரி மாதம் பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சில வருடங்களாக குளிர்காலத்தில் நிலவி வரும் எதிர்மறையான மாற்றங்களின் ஆதாரமாக இந்த வருட குளிர்கால வானிலை அளவுகள் பதிவாகியுள்ளன எனத் தெரி விக்கப்படுகின்றது.





# 4 நோயாளிகளுக்கு ஒரு தாதி என்ற வீதத்தில் பிரிட்டிஷ் கொலம்பியாவில் மருத்துவ சேவை

பிரிட்டிஷ் கொலம்பியா, மார்ச்03

ஆகக்குறைந்த தாதியருக்கு-நோயாளி என்ற அளவீட்டை பிரட்டிஷ் கொலம்பியா அரசாங்கம் அறிவித்துள்ளது.

அத்துடன், 237 மில்லியன் டொலர்களை இந்த திட்டத்திற்காக முதலீடு செய்யவுள்ளதாகவும் அது தெரிவித்துள்ளது.

நான்கு நோயாளிகளுக்கு ஒரு தாதியர் 24 மணித்தியாலங்களுக்கும் ஏழு நாள்களுக்கும் இருக்கின்ற வகையில் இந்த புதியத் திட்டம் அமையவுள்ளது.

இவ்வாறான நோயாளிகளுக்கான, தாதியர் எண்ணிக்கை என்பது, கனடாவிலேயே சிறந்ததாக பிரிட்டிஷ் கொலம்பியாவில் இருப்பதாக மாநில சுகாதார அமைச்சர் எட்ரியன் டிக்ஸ் தெரிவித்துள்ளார்.




# தர்க்கத்தின் போது பெண் ஒருவரை தாக்கிய பொலிஸ் அதிகாரி கைது!

ஒன்ராரியோ,மார்ச்03

கடந்த நவம்பர் மாதத்தில் இடம்பெற்ற தர்க்கத்தின் போது பெண் ஒருவரைத் தாக்கிய குற்றச்சாட்டில் டொரன்டோ பொலிஸ் அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டு, தண்டிக்கப்படவுள்ளார்.

டொரன்டோ பொலிஸ் சேவையைச் சேர்ந்த 52 வயதான அதிகாரி ஒருவர் நேற்று மார்ச் 2ஆம் திகதி கைது செய்யப்பட்டமையுடன், தாக்கிய குற்றச்சாட்டு மற்றும் சட்டவிரோத சிறைப்படுத்தல் ஆகிய குற்றங்கள் இவர் மீது சுமத்தப்பட்டுள்ளன.

இந்தப் பொலிஸ் அதிகாரி கடமையில் இருந்து நவம்பர் 26ஆம் திகதி இந்த சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 9ஆம் திகதி நீதிமன்றத்தின் முன்னால் ஆஜர்படுத்தப்பட்டவுடன் இவருக்கு தண்டனை விதிக்கப்படவுள்ளது.



# பறக்கும் தட்டுகள் தொடர்பில் வெளிவருகின்றது அறிக்கை!

## விஞ்ஞானி மோனா நீமர் தகவல்

ஒன்ராறியோ, மார்ச்03

அடுத்துவரும் இலையுதிர்காலத் திற்குள் அடையாளங் காணாத பறக்கும் தட்டுகள் தொடர்பிலான அறிக்கை ஒன்றை வெளியிடப் போவதாக கனேடிய அரசாங்கத்தின் முன்னணி விஞ்ஞானியான மோனா நீமர் தெரிவித்துள்ளார்.

ஒட்டாவாவில் ஊடகங்களை சந்தித்த மோனா நீமர், கனேடிய மக்களுக்கும் அடையாளங்காணாத பறக்கும் தட்டுக்கள் குறித்த தகவல்களைக் கிடைக்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

கனடாவின் சிரேஷ்ட விஞ்ஞானி யான நீமர் நேரடியாக பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுக்கும், புத்தாக்கம், விஞ்ஞானம் மற்றும் தொழில்துறை அமைச்சருக்கும் அறிக்கை சமர்ப்பித்து வருகின்றார்.

எதிர்வரும் இலையுதிர்காலத்தில் வெளிவரப்போகின்ற அறிக்கை, அடையாளங்காணப்படாத பறக்கும் தட்டுக்கள் தொடர்பில் ஆர்வமிக்கதாகவும், தனித்துவமானதாகவும் அமையும் என நீமர் தெரிவித்துள்ளார்.



# செஸ் போட்டியாளர்களுக்கான விசாக்களை விரைந்து வழங்கக் கனடாவிடம் கோரிக்கை

ஒன்ராறியோ,மார்ச்03

அடுத்த மாதம் டொரன்டோவில் நடைபெறவுள்ள சர்வதேச செஸ் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள போட்டியாளர்களுக்கான விசாக்களை விரைவில் வழங்குமாறு சர்வதேச செஸ் சம்மேளனம் கனேடிய அரசாங்கத்திடம் கோரியுள்ளது.

பல்வேறு நாடுகளைச் சேரந்த போட்டியாளர்கள் கனடாவிற்கு வருவதற்கான விசாக்களை பல மாதங்களுக்கு முன்னரே விண்ணப்பத்திருந்த போதிலும், இதுவரை எவ்வித முடிவுகளும் வழங்கப் படவில்லை என சம்மேளனம் சுட்டிக்காட்டியுள்ளது.

செஸ் உலகில் கனடாவின் அதிகரித்த ஆர்வத்தை அங்கீகரிக்கும் வகையிலேயே, முதன்முறையாக கனடாவில் இந்தப் போட்டிகள் நடைபெறவுள்ளன என சம்மேளனம் தெரிவிக்கின்றது.

இந்தப் போட்டிகள் இன்னும் ஒரு மாதத்தில் நடைபெறவுள்ள நிலையில், அடுத்த வெள்ளிக்கிழமைக்குள் கனேடிய அரசாங்கம் விரைந்து நடவடிக்கை எடுக்கவில்லையெனின், இந்தப் போட்டிகளை ஸ்பெயினுக்கு இடமாற்றம் செய்யப் போவதாகவும் சம்மேளனம் எச்சரித்துள்ளது.







## கனேடியத் தமிழர் நிதியுதவியின் மூலம்

# தெஹியோவிட்ட தமிழ் மகா வித்தியாலயத்தில் புதிய விஞ்ஞான ஆய்வுகூடம் திறந்து வைப்பு

தெஹியோவிட்ட தமிழ் மகா வித்தியாலயத்தில் புதிய விஞ்ஞான ஆய்வுகூடம் மற்றும் வகுப்பறைகளைக்கொண்ட கட்டடத் தொகுதி நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கனேடியத் தமிழர் பேரவையின் 15ஆவது வருடாந்த கனேடியத் தமிழர் நிதி சேர் நடையின்போது திரட்டப்பட்ட நிதியுதவியின் மூலம் இந்த முக்கியமான நிகழ்வு சாத்தியமானது.

இந்நிகழ்வில் இலங்கைக்கான கனடாவின் உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஷ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

மனோ கணேசன் எம்.பி., வேலுசாமி இராதாகிருஷ்ணன் எம்.பி., சஜித் சஞ்சய் பெரேரா எம்.பி., எம்.உதயகுமார் எம்.பி., கனேடிய தமிழ் காங்கிரஸைப் பிரதிநிதித்துவப்படுத்தி நிறைவேற்றுப் பணிப்பாளர் டான்டன் துரைராஜா, முன்னாள் தலைவர் சுந்தரமூர்த்தி உமாசுதன், இலங்கைக்கான மனிதாபிமான திட்ட இணைப்பாளர் துஷ்யந்தன் ஆர். துரைரட்ணம் மற்றும் உறுப்பினர் அசோகன் தம்புசாமி ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

தெஹியோவிட்ட தமிழ் மகாவித்தியாலயம், 1906 ஆம் ஆண்டு முதல் செழுமையான வரலாற்றைக் கொண்டு, இப்பகுதியில் அறிவு மற்றும் கல்வியின் கலங்கரை விளக்கமாக விளங்குகின்றது.

இந்தப் பாடசாலை மண் சரிவு காரணமாக 2016 ஆம் ஆண்டு மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டதுடன் கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்ள அபாயமான சூழ்நிலையை உருவாக்கியது. இதை அறிந்துகொண்ட கனேடியத் தமிழர் பேரவை தெஹியோவிட்ட தமிழ் மகா வித்தியாலயத்தின் மாணவர்களுக்கு நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய விஞ்ஞான ஆய்வுகூடம் மற்றும் வகுப்பறைகளை நிர்மாணித்துத் தருவதாக உறுதியளித்திருந்த நிலையில் இந்தத் திறப்பு விழா விமர்சையாக நடைபெற்றது.









# தெஹியோவிட்ட தமிழ் மகா வித்தியாலயத்தில் புதிய விஞ்ஞான ஆய்வுகூடம் திறந்து வைப்பு









